
# சிரித்திரன்






Pulamai Media
PRODUCTIONS
JAFFNA

**Video editing | 2D, 3D Animations | Computer Graphic designing**
**Wedding videos | White Board Animation | Advertisements**
**Content writing | Social media managements**
**Vocal artists | 3D architechural Visualization**
**Colour correction & Colour grading | VFX Animation**

CONTACT US +94 741 238 937

info@pulamaimedia.com

# சிரித்திரன்



## மீண்டும் தொடங்கும் மிடுக்கு...

இனவாத இன்னல்கள், இயற்கையின் சீற்றங்கள், புது வரவாய் வந்த வைரஸ் இவற்றின் மத்தியில்
சிரிப்பை மறந்த சீவியமோ நம் வாழ்க்கை என எண்ணும் போது... புதிய கண்டு பிடிப்புக்களுக்கான வளர்ச்சியகத்தின் (Centre for Creativity & Innovation) அரிய முயற்சியால் சிரித்திரன் மீண்டும் சிரிக்கின்றான்.

1963ம் ஆண்டு சிரித்திரன் கருவாகி, உருவாகி, தவழ்ந்து, தடம்பதித்து 32 ஆண்டுகள் தலை நிமிர்த்தி பவனி வர தம் கரம் நீட்டியவர், தம் தோளில் தாங்கியவர் அநேகர். அவர்கள் அனைவரையும் அன்புடன் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

என் தந்தையின் அனைத்து வெற்றிகளினதும் ஆணிவேர் என் தாயார்.

தந்தையின் ஒவ்வொரு முயற்சியிலும் துணை நின்ற துணைவி அவர். என் தாயாரின் இலட்சியம் கனவு அனைத்துமே தந்தையின் படைப்புக்கள் அழிந்து போகக்கூடாது, அவரின் தூரிகையின் பாத்திரங்கள் துயில் கொள்ளக்கூடாது, கருத்தூண்கள் மீண்டும் களமிறங்க வேண்டும் என்பவை மட்டுமே. இன்று அம்மா இருந்திருந்தால் சிரித்திரன் மீள்வருகை கண்டு ஆனந்தக் கண்ணீரால் ஓர் அபிஷேகமே நிகழ்த்தியிருப்பார்.

சுந்தர் (பப்பா) சுவை சுண்டாமல், தரம் குன்றாமல் சிரித்திரன் பக்கங்கள் ஒவ்வொன்றையும் பல கதை பேச வைத்தார். தூரிகையில் துளிர் விட்ட பாத்திரங்களை தன் சிந்தனையால் செதுக்கி உலாவரச் செய்து பெரும் வெற்றியும் கண்டார். இன்றும் கூட சின்னக்குட்டி உங்கள் இதயங்களில் சிம்மாசனமிட்டு இருப்பது அவரது வெற்றியின் சான்று. சிரித்திரன் குடும்பம் மிகப் பெரியது. ஆம். சிரித்திரன் பண்ணையில் வளர்ந்தவர்கள், வாழ்ந்தவர்கள் அநேகம் பேர் அவர்கள் அனைவரையும் கரம்குவித்து கைநீட்டி அழைக்கின்றோம் .

அதே சிறப்போடும் சிரிப்போடும் சிரித்திரன் சிறகு விரிக்கட்டும். சிந்தனையோடு சிரிப்பாய் இனி வரும் நம் நாட்கள் சிறக்கட்டும். தேக்கமில்லாமல் நம் தேடல்கள் தொடரட்டும் .

—வாணி சுந்தர்—

## 50 ஆண்டுகளின் பின்னரும் கருத்து இன்னமும் அப்படியே









**ஆண்கள் குணமே அப்படித்தான்**



சிரித்திரன் " செய்தொழில் தெய்வம் சிரிப்பே சீவியம்..."

முதல் வருகை 1963
மீள்வருகை 2021
நகை - 01 சுவை - 01, 02








# தலைவனைத் தேடும் தமிழன்

சரித்திரத்தை சரியாக பார்த்தால் அது தலைவர்களது சுயசரிதம் என்பது விளங்கும். தலைவர்களின் தலையெழுத்தில் தான் ஒரு தேசத்தின் தலைவிதி தங்கியிருக்கிறது. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் ஓர் இனத்தின் உயர்வுக்கும், தாழ்வுக்கும் தலைவர்களே காரணகர்த்தாக்கள்.
தலைவன் என்பவன் மக்களுக்குத் தலையானவன். மக்களை வழிநடத்திச் செல்பவன் மக்களை ஐக்கியப்படுத்தி, அந்த ஐக்கியத்தின் சின்னமாய் விளங்குபவன்.
ஒரு தலைவனுக்கு தீர்க்க தரிசனம் வேண்டும். காலத்தின் போக்கை கணித்து எதிர்காலத்தை உணரும் ஞானம் வேண்டும். மக்களின் வழிகாட்டி என்பதால் தான் போகும் வழியை அவன் புரிந்திருக்க வேண்டும். பலருக்கு பிரதிநிதியாவதால் அவன் தன்னை இழந்து விடுகிறான். மக்களின் மூச்சு அவன் மூச்சாவதால் அவனது தனித்துவ சுயநலன்கள் தகர்ந்து விடுகின்றன. அவன் ஓர் இனத்தின் இதயத்தை, ஒரு தேசத்தின் ஆன்மாவை பிரதிபலிப்பவன். எனவே அவன் சரித்திர புருஷன் சமுதாயத்தின் சிற்பி.
தன்னலவாதிகள் தலைவர்கள் அல்லர்.
தீர்க்க தரிசனம் இல்லாதவர்கள் சமூக உணர்வு அற்றவர்கள் தலைவர்கள் அல்லர். நேர்மையும் உள்ளத்தில் தூய்மையும், தியாகமும், மனதில் திடமும் இல்லாதவர்கள் தலைவர்கள் அல்லர். இந்த தகைமை இல்லாத் தலைவர்களால் தான் சமூகங்கள் சீரழிந்தன. ஓர் இனத்தின் அழிவுக்கும், இழிவுக்கும் இவர்கள்தான் காரணம்.
இந்நாட்டில் தமிழ் சமூகம் தலை குனிந்து வாழ்கிறது. தன்மானம் இழந்து, தகுதி இழந்து விரக்தியின் விளிம்பில் வெருண்டு நிற்கிறது. பெருமை, மிகுந்த பழமை, வீரம் நிறைந்த வரலாறு, கடல் போன்ற கலாச்சாரம் அன்று தமிழனின் சொத்து. இன்று சுரணையிழந்து, சோர்வுற்று சுருண்டு போய்க் கிடக்கிறது எமது சமூகம்.
தமிழனுக்கு இன்று வேண்டியது ஒரு தன்னலமில்லாத் தலைவன் அந்த தலைவனை தமிழனே இனங்காண வேண்டும் . எமது இனத்தின் சுபீட்சத்திற்கு இது தான் ஒரே வழி.




**நா**ன்கு தசாப்தங்களின் முன் சிரித்திரன் சுந்தர் எழுதிய ஆசிரியர் தலையங்கம் இது. அவரது தீர்க்கதரிசனம் இன்றும் அர்த்தம் கொண்டதாக உள்ளது. வாசகர்களின் பார்வைக்காக மீண்டும் நிலைக்கண்ணாடியில் பதிவாகி உள்ளது.

# கொரோனா ஜோக்ஸ்



என்ன... வீட்டிற்கு 'கொரோனா' மாளிகை என்று
பெயர் வைத்திருக்கிறாய்?

ஓ.... நான் இப்ப இங்கு தனியாத்தான் இருக்கிறன்...!



அந்தப் பிச்சைக்காரனுக்கு கொரோனா பயம் அதிகம் போல... ஏன்?
முகக் கவசம் போடாத ஆட்களிடம் பிச்சை வாங்க மாட்டாராம். பிச்சைக் காசையும் கழுவித்தான் வாங்குவாராம்... அதுவும் மூன்று அடி தூரத்தில் நின்று...!




எல்லாம் ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கைதான்...!



என்ன விளையாட்டு ஹொக்கியா? இல்லை...
கொரோனா...? தனியாகத்தான் விளையாட வேண்டும்.



# கொரோனா ஊரடங்கு

யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு போடப் போறாங்களாம் நீங்கள் உங்கட பாட்டில இருக்குறீங்களாம்.. கொஞ்சமும் யோசனையும் வேண்டாமா? இனி என்ர வயிறு வெடிக்க நான் தான் கத்த வேணும். உங்களுக்கு என்ன? குடும்பத்தை பற்றி அக்கறை இருந்தால் தானே... சுயமாய் உழைச்சு சாப்பிட்டு வாழ்ந்தால் தானே சுறணை வரும் புறுபுறுத்தபடி வீட்டை சுத்தம் செய்து கொண்டிருந்தாள் சுமதி.

வீட்டு முற்றத்தின் மாமரத்தின் கீழ் பக்கத்து வீட்டுப் பிள்ளைகளுடன் சுமதியின் பிள்ளைகளும் சேர்ந்து கிளித்தட்டு, எட்டுக்கோடு, தாயம் என்று மாறி மாறி விளையாடுவதனையும் இடையிடையே அவதானித்தாள் சுமதி. நேரமும் இருளத்தொடங்கவே "பிள்ளைகள் விளையாடியது காணும் குளிச்சிட்டு படியுங்கோ" என அனைவருக்குமாக குரல் கொடுத்தாள் சுமதி. அப்போது ஒரு வார்த்தை பேச ஒரு வருசம் ... என போன் சிணுங்கியது

ஒரு வேலையும் செய்யவும் விடாதுகள் இப்ப எதுக்கு போன் பண்ணுதுகளோ?

ஓ.... சொல்லு.... அதுக்கு இப்ப என்ன? என்னட்ட ஒரு ஐஞ்சு சதமும் இல்லை நானே என்ன செய்றது எண்டு யோசிச்சிற்று இருக்கிறன். கடைசியில நானும் பிள்ளையளும் தான் தெருவில பிச்சை எடுக்கணும்...

நீ வை போனை...கோபத்துடன் அழைப்பை துண்டித்தாள்.

எருமை மாட்டில் பெய்த மழைதான் என்றவரிடம் கொஞ்சம் கூட உன்னோட மனச்சாட்சிக்கு யோசிச்சு நடக்க மாட்டீங்களா? பக்கத்து வீட்டில இருக்கிறவை நேற்றே மூடை மா, சீனி, அரிசி வாங்கி போட்டினம். அங்கர், பிஸ்கட் என்று இன்றைக்கு நிறைய சாமான் வந்து இறங்கினது. கையிலயும் காசில்லை பிள்ளைகளுக்கு பசி, பட்டினி என்று, என்ன செய்யப் போகிறோம்....?

தலையில் அடித்தபடி சுவரோடு குந்தியிருந்தாள் சுமதி. துப்பரவு செய்த வீடும் அரைகுறையாக அப்படியே போடப்பட்டிருந்தது.



தர்மினி பத்மநாதன்

மீண்டும் மீண்டும் ஒரே விடயத்தை கூறி வியாசனைக் கோபப்படுத்தினாள். ஆயினும் சுமதியின் எல்லை கடந்த வேகத்தையும், சிந்தனை செயலையும் வியாசனால் நிரப்ப முடிவதில்லை. வியாசன் முன்னாள் போராளியாக இருந்த போதும் 2009 முள்ளிவாய்க்கால் யுத்தத்துடன் தலையில் காயப்பட்டான். இன்றுவரை தலைக்குள் சன்னத் துண்டுகள் இருந்து அவனை வதை புரியும். அடிக்கடி தலைசுற்றி மயக்கம் என்ற நிலையில் பாதிக்கப்பட்டிருந்தான்.

சுமதியும் வியாசனும் போராளியாகவே ஒரே களத்தில் சந்தித்துக்கொண்டவர்கள். அவ்வாறே தடுப்பு முகாமில் இருந்து வெளியேறிய நிலையில் பேச்சுத் திருமணமாக இணைந்து கொண்டனர். முன்னாள் போராளிகளை 2009 இற்கு முன் தூக்கி தலையில் வைத்துக் கொண்டாடிய சமூகம் இன்று வேற்றுக் கிரகவாசிகளாகவே பார்க்கத் தொடங்கிவிட்டது. எதிர்காலம் தொடர்பில் அச்சம் சூழ்கையில் தனித்து விடப்படும் மனநிலை பெற்ற வயிற்றை உலுப்பியது. மனசைத் திணறச் செய்தது. போராளி வாழ்க்கையின் பாதிப்புகள் இவர்கள் வாழ்வின் பின்புல ஓசையாக இருந்தது. புதிய வாழ்க்கையிலும் தாக்கம் செலுத்தியது. வியாசன் கிளிநொச்சியையும், சுமதி யாழ்ப்பாணத்தையும் சேர்ந்த மிகவும் எளிமையான குடும்பங்கள்.

இவர்கள் அனுபவித்த இழப்புகள் அதிகம் இப்போது சிறு உதவியாக இருப்பது சுமதியின் அண்ணனின் வெளிநாட்டுப் பொருளாதாரம் மட்டுமே.

இப்போது வெளிநாடுகளில் கொரோனா - 19 அச்சம் உலுப்பிக் கொண்டிருப்ப தனால், சுமதியின் அண்ணன் ரவியி னாலும் பெருமளவில் தொடர்ந்து உதவ முடியாத நிலை ஏற்பட்டது.

"சுமதி எங்கட நாட்டிலையும் மிக மோசமாக கொரோனா ஆட்களை கொலை செய்து வருது. அதிகமாய் முதியவர்களும் இறந்து கொண்டு இருக்கினம். எங்கடை சனங்களும் சிலர் இங்கு வந்து இறந்து போயி ருக்கினம். வேலைகளும் நிப்பாட்டி யாச்சு. பள்ளிக்கூடம், போக்குவரத்து, கடைகள் என்று எல்லாம் பூட்டி வீடுகளில் இருக்கச் சொல்லியாச்சு. இன்னும் எவ்வளவு காலம் செல்லுதோ தெரியாது. ஆனால் விரைவில் முடிகிற காரியமில்லை. நாங்கள் வெளியே போவது என்றாலே விண்ணப்பம் கொடுத்து அனுமதி பெறவேண்டும். பொலீஸ் வீதியில் வைத்து பரிசோதனை செய்து நியாயமான தேவை என்றால் மட்டும்தான் வெளியே செல்ல முடியும். இல்லையேல் அபராதம் கட்ட வேண்டும். இது தான் பிரான்ஸ் அரசின் புதிய நடை முறை. சடங்குகள், கொண்டாட்டங் கள் விழாக்கள் என்டு ஒன்றுமே இல்லை. வீட்டைப் பூட்டி விட்டு எல்லாரும் உள்ளே இருக்க வேண்டியது தான். ஏதும் அவசர பொருள் தேவை என்றால் போன் மூலம் பெறக்கூடிய வசதிகள் செய்திரு-க்கு. விசா இல்லாமல் நிக்கிற எங்கடை நாட்டுத் தமிழ் பெடியளுக்கு சில சனங்கள் சேர்ந்து உதவி செய்யினம், இப்படித்தான் இங்கையும் நிலமை. இருக்கு இருக்கிற காசைவச்சு சமாளியுங்கோ. நிலைமை சீராக வரட்டும் அண்ணி யும் பிள்ளைகளும் கண் மூடின சிலவுக்காரர் என்ர பாடுதான் திண்டாட்டமாய் இருக்கப் போகுது. ஹோட்டல்கள் எப்போ திறக்கிறாங் களோ அப்போ தான் எமக்கும் சாப்பாடு." என ரவி கூறிய விடயங்கள் அனைத்தும் அவள் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தது. எப்பவும் அவருக்கும் சொல்றனான் இருக்கிறதில யாவது அஞ்சு பத்து மிச்சம் பிடித்து ஒரு பெட்டிக் கடையாவது போட்டு வீட்டோடு வியாபாரம் செய்வமென்று. மழை, வெயில், பனி என்று அண்ணாவும் எவ்வளவு கஸ்டப்பட்டு அந்த பணத்தை எனக்கு அனுப்பவான். கண்கள் குளமாகியது சுமதிக்கு....

எத்தனை காலம்தான் அவரும் உங்களுக்காக உதவ முடியும் என வியாசனை நோக்கிக் கேட்டாள். திரும்பத் திரும்ப ஒரே கதையைச் சொல்லிக் கொண்டிருக்காமல் வீடு வாசலை முதல் கூட்டி முடியும். எல்லாத்தையும் அரையும் குறையுமா விட்டுட்டு தலையில கை வைக்க இங்க என்ன செத்த வீடா நடக்குது? பொழுதுபடுகிற நேரம் விளக்கு வைக்கிற நேரம் பொறுப்பில்லாத வேலை செய்யாத, படைச்சவன் படியளப்பான் நாங்கள் சாக வேண்டும் என்ற எழுத்து இருந்திருந்தால் முள்ளிவாய்க்காலில் செத்திருப்பம். கொரோனா வரை இருந்திருக்க மாட்டோம். வீட்டைக் கூட்டி சாமி விளக்கை வை இல்லாட்டி தும்புத்தடியை தூர எறிஞ்சு போட்டு வாயை மூடிக்கொண்டு இரு. நடக்கிறது தான் நடக்கும்.

கொஞ்சம் கூட எனக்கு நிம்மதி இல்லை. என்னோட உடல் நிலை என்னவென்று தெரிஞ்சு தான் கலியாணமும் கட்டினனி. இப்ப எல்லாத்துக்கும் சண்டை. அவளும் என்ன செய் யிறது இரண்டு பேரும் உழைக்கக்கூடிய வயதில் எந்த உழைப் பும் இல்லாமல் எப்படி இருக்க முடியும்? அவள் பயப்படுவதுதில் நியாயம் இருக்கு. ஆனால் என்னாலும் முடிய வேணுமே? பாரமான வேலைகள் ஏதும் செய்ய முடியாது. வெயிலுக்கை போக முடியாது. தலைக்குள் இருக்கிற சன்னம் எப்ப தொந்தரவு தருமென்று தெரியாது. நானும் என் உடல் நிலையை நம்பி வீட்டைவிட்டு வெளியே இறங்கவும் முடியாது. 38 வயசில் உழைப்பு இல்லாத வாழ்க்கையை எப்படி எதிர்பார்க்க முடியும்.

அவன் எண்ணங்கள் அலைபாய தாங்கிக் கொள்ள முடியாத மனநிலையில் சுமதியையும் பேசிவிட்டு கட்டியிருந்த சாரத்தை மீண்டும் உதறிக் கட்டி விட்டு ரீ-சேர்ட்டை மாற்றிக் கொண்டு வெளியேறினான்.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை சனம் நீண்ட வரிசையில் நின்று, பக்கத்தில் உள்ள பெட்ரோல் செட்ரில் கூட்டம் அலைமோதியது. இன்னும் ஊரடங்கிற்கான காலம் அறிவிக்கவே இல்லை. அதற் கிடையில் எங்கட சனம், முண்டியடிக் குதுகள் போத்தல் போத்தலாய் கொண்டு போய் என்னதான் செய்யிறது. செல் அடிக்குள்ளையும் பொம்பர் அடிக்குள்ளையும் ஓடி ஓடிப் பழகின சனத்துக்கு உடனே இந்தக் குணம் வரும்தான். தேவையோ இல்லையோ கையில கிடக்கிறத வீடுகளில் பதுக்க வேண்டியது தான். வேடிக்கை பார்த்தவனுக்கு மேலும் அதிர்ச்சி காத்திருந்தது. சனத்திரள் பக்கத்தில் இருக்கும் பெட்டிக் கடையை நோக்கிக் கூட அடிபட்டு ஓடிவந்து இடம் பிடித்தது. நான் முந்தி நீ முந்தி என கூச்சலிட்டனர். என்ன அண்ணை இது?

கடைக்காரனை நோக்கி கேட்டான் வியாசன். 30 வருச காலத்திற்கு மேலான பழக்க தோஷம்.. சொல்லிக் கொண்டு சிரித்தார் கடைக்காரன்.

அண்ணா எனக்கும் 5 கிலோ சீனி, 5 கிலோ அரிசி, 5 கிலோ உப்பு, 5 கிலோ மா, பருப்பு, பிஸ்கட், சோயா மீட்ஸ், உப்பு, எண்ணெய்.. எல்லாத்தையும் போட்டு வையுங்க.

சுமதின்ர அண்ணா காசு அனுப்பி இருக்கிறார். வந்தவுடன தாரன் சனம் வாற வரத்திக்கு கடையும் கழுவிப் போடுவியள். எனக்கும் எடுத்து வையுங்க அண்ணை. சாடையாக கடன் கேட்டான் வியாசன்.

மிக வேகமாக உட்சென்ற முதலாளி சிறிய மட்டையில் இன்று முதல் கடன் இல்லை என விளம்பரத்தை தொங்கவிட்டார்.

> "குற்றம் புரிந்தவனும்
> தனக்கு நியாயம் கேட்கிறான்.
> குற்றத்திற்கு ஆட்பட்டவனும்
> தனக்கு நியாயம் கேட்கிறான்...
> யாருக்கு அதை வழங்குவது
> என்பதை ...
> பணம் முடிவு செய்கிறது..!!!
>
> -கண்ணதாசன்..



அட கடவுளே! இலையான் கலைக்க நாங்கள் தேவை. ஆனால் இன்றைக்கு புதுச் சட்டம். ம்... இனி நீங்கள் பெரும் முதலாளிதான். அண்ணை அயலை முதலில் மதிக்கப்பழக வேணும்.

யாழ்ப்பாணம் மடத்தடியை சுற்றிப்பார் சனம் நிறைஞ்சிருக்கிற இடம். உன்ர சனம் தான். வாற சனத்துக்கு விலையைக் கூட்டினாலும் சரி. ஆனால் மனசாட்சிப்படி நட. இதுவரை இல்லாத கடனா இனியும் குடுப்பாய். மக்கள் அவலப்படும் போது உதவி செய். நீண்ட காலம் நல்லாய் இருப்பாய். கடனை எழுதி வைத்து கொஞ்சம் கொஞ்சமாக வாங்கு. வியாசனின் அறிவுரையின் நியாயத்தைப் புரிந்து கொண்ட ரவி. மனசால் மன்னிப்பு கேட்டு அறிவுறுத்தலை நீக்கினார்.

கடனாக வாங்கிய பொருட்களைப் மனைவியின் கையில் கொடுத்து விட்டு செய்தி சனலைத் திருகினான் வியாசன். கடைகள் பெட்ரோல் செட், சந்தை என்று சனம் திசை எங்கும் அலை மோதுவது தெரிந்தது. அந்தப் பெரிய சண்டைக்குள்ளையே உயிரோட மீண்ட எங்களுக்கு கொரோனாவும், மண்ணாங்கட்டியும்.

சுமதி தேத்தண்ணி இல்லையா? இனி என்ன தேத்தண்ணி? சொல்லாமல் கொள்ளாமல் வெளியேவெளிக் கிட்டுப் போனால் பின்னால துரத்திக் கொண்டே வாரது? என்றாள் சுமதி. ஏற்கனவே தயார் செய்யப்பட்டு டிவி மேசையில் மூடி இருந்த தேநீர் ஆறிப் போன நிலையில் இருந்தது. இனி சூடாக இல்லையென்றால் எனக்குத்தான் சூடு விழும். அங்குமிங்கும் பார்த்து விட்டு மடக்கென குடித்து முடித்தான். குடித்த கப் மீண்டும் டிவி மேசைக்கு சென்றால். அதற்கும் புராணம் வாசிக்கப்படும் என்பதை உணர்ந்தவன், குசினிக்குள் சென்று கழுவி வைத்தான். செய்தி பார்த்தது காணும் நாடகத்தில் மாற்றி விடுங்கோ பழைய கட்டங்கள் தான் திரும்ப போடுறாங்கள். பறவாயில்லை போடுங்கோ குசினியிலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கொரோனா எனக்கு என்னமோ நம்பிக்கை இல்லை. இது ஏதோ அரசியல் சூழ்ச்சி போல. இதிலை உண்மை இல்லை என்று தான் மனசு சொல்லுது... தன் நியாயத்தை சுமதியுடன் பகிர்ந்து கொண்டான் வியாசன்.

சில நாட்களின் பின்... ஊரடங்கு அமுலில் இருந் தமையால் அடிப்படைத் தேவைகள், மருத்துவ சிகிச்சைகளுக்கான அனுமதி வழங்கப்பட்டது. இராணுவமும், போலீசும் தீவிர பாதுகாப்பில் ஈடுபட்டனர். தேவையற்று வெளிச்சென்றவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவங்களும் பதிவாகின. வணிகர்கள், அவசரத்தை உடைய மக்கள், அரச அதிபர் மற்றும் போலீஸ் அதிகாரிகள் அனுமதி பெற்று தேவைகளை பூர்த்தி செய்ய தொடங்கினர். சில உள்ளூர் வியாபாரி களும் புதிது புதிதாக கொரோனா கால ஊரடங்கில் தோற்றம் பெற்றனர்.

வாசலில் பழங்கள், காய்கறிகள், தேங்காய், சவர்க்காரம் என சிறிய வியாபார முயற்சிகளில் பலர் ஈடுபடத் தொடங்கினர்கள்.



ஊருக்குள்ள கொரோனா வந்ததும் நன்மைதான்..ஏன்? வீட்டுப்பக்கம் கடன்காரனும் வாறதில்லை வீட்டு வாடகைக் காரனும் வாறதில்லை...

வீடுகளுக்குள்ளே முடங்கிக் கிடக்க விரும்பாத இளைஞர்கள் நிவாரண பணிகளில் ஈடுபடத் தொடங்கினார்கள். சிலர் புதிய வியாபாரிகளாகினார்கள்.

'மதில்லை இருந்த வாழைக் குலையை காணவில்லை'. முன் வீட்டு ராணி அன்ரி அழாத குறையாக கூறினார். நீளமான பெரிய வாழைக் குலை வாழைத் தடல்களால் மறைக்கப்பட்டிருந்ததும் தெரிந்ததே. அங்கும் இங்கும் நடமாடித் திரிந்த தெருக் கள்ளர்தான் திருடி இருக்கவேணும். கொண்டுபோய் வித்திருப்பாங்கள். கஞ்சா, கசிப்புத் தேவைக்கு இனி களவுக்கும் இறங்குவார்கள்.

இப்ப நாங்கள் என்ன செய்கிறது? ஜீ.எஸ் அல்லது உதவி செய்கிற நிறுவனத்திட்டை தான் போகவேணும். இனியும் அண்ணாவை எதிர்பார்த்து கைநீட்டி வாழ்றது சரியில்லை. பொம்பிளைப் பிள்ளைகளை வைச்சுக்கொண்டு என்ன நம்பிக்கையில் இப்படியிருப்பது? சுமதியின் முன்னோக்கிய சிந்தனைகள் அவளைப் பாடாய்படுத்தியது.கொரோணாவின் பின் அவளால் நிம்மதியாக நாட்களைக் கழிக்க முடியவில்லை. சந்தோசமாய் ஒரு பிடி உணவைத் தானும் உண்ண முடிய வில்லை. நித்திரையும் தொலைந்தது. உடம்பு மட்டும் படுக்கையில் ஆனால் எண்ணங்களும், சிந்தனைகளும் வானவெளி எங்கும் பரந்து விரிந்தன. வீட்டுக்கு பின்னால குப்பை இருக்கிற இடத்தைத் சுத்தம் செய்து, அந்த குப்பைகளை பசளை ஆக்கி, நிலத்தை கொ-த்தி, தக்காளி, கத்தரி, மிளகாய் வைக்கலாம். பழைய வாளிகளில் மண்ணைப் போட்டு கீரை, பசளி வைக்கலாம்.

எங்கட தேவைக்கும் உதவும். பிள்ளைகளின் மூளைக்கும் வேலை கிடைக்கும். மனசுக்கு ஆறுதல் கிடைக்கும். மெல்லமெல்ல செய்விக்க பிள்ளைகளுக்கும் பழகிவிடும். தொண்டு நிறுவனத்தில் இலவச கன்றுகள் குடுக்கிறதாய் செய்தியில அறிவிச்சவங்கள். அவங்களைத் தேடிப்பிடிக்கலாம். வளவுக்க இருக்கிற முருங்கை இலை, வாழைக்காய், வாழைப் பொத்தியுடன், முட்டையையும் முன்னுக்கு மேசை வைச்சு விக்கலாம். லோன் காரரிட்ட லோன் கேட்கலாம். ஆனால் மனுஷன் சாக்கொல்லிப் போடும். குடும்பங்களைக் கொலை செய்கிற லோன்களை வாங்கி நிம்மதி கெடாமல் இருக்கிறதுதான் பொம்பிளைகளுக்குப் புத்திசாலித்தனம்.

நான் மீளமுடியாத இயலாமையால் தான் கத்துறது தான் ஆனால் உன்னில் எவ்வளவு அக்கறை பாசம் என்டதை நீ தான் விளங்கிக் கொள்ளுறதில்லை. கௌரவமாய் கல்யாணம் செய்தனாங்கள். கௌரவத்தோட வாழ்ந்து காட்டவேணும். எங்களைப் பார்த்து தான் பிள்ளைகள் வாழ வேணும். இப்ப இருக்கிற சூழல் கொஞ்சம் மாறட்டும். அண்ணாட்ட ஒரு உதவி மட்டும் கேட்டுப் பார்ப்பம் வீட்டோடை சின்னக்கடை போடலாம். கோழியை இன்னும் கொஞ்சம் கூட வாங்கி வளர்க்கலாம். தையல் வேலைக்கு கரன்ட் மெசின் வாங்கலாம். செய்யக் கூடிய சின்னச் சின்ன வேலைகளைச் செய்து பார்த்தால்தான் எது பொருந்தும் என்று தெரியும். ஏமாத்துக்கார அரசியல் வாதிகளிட்டை உதவி கேட்டு திரியிரதை விட தன் மானத்தோட வாழ்ந்து காட்ட வேணும். அண்ணாவும் சந்தோஷப்படுவார்...

எப்படியும் ஒடித்திரியுறதுக்கு ஒரு சைக்கிள் வேணும். வளவைச் சுத்தமாக்கி ஒழுங்குபடுத்த வேணும். அயல்களில் இருக்கிற காய்ந்த தென்னை ஓலைகளை கேட்டு வாங்கி ஈர்க்கு எடுத்து விளக்குமாறு செய்யக் குடுக்கலாம்.

பின்னேரத்தில் ஏதாவது சாப்பாட்டுச் சாமான் செய்து வீடுகளுக்கு குடுக்கலாம். வாழ இத்தனை வழி இருக்கு தானே.. அப்ப தான் நாங்க உழைக்கிறம் என்ட மன தைரியமும் வரும். எல்லாத்தையும் நினைக்க நினைக்க ஆசையாய் இருக்கு. செய்து பார்ப்பதில் தான் வெற்றி இருக்கு. ம்... இப்போ இயற்கை விவசாயம், பண் பாடு என்று எமது அருகிப் போன விடயங்களையும், சுகாதாரத்தையும், மீண்டெடுக்கின்ற கதை தொடங்கியிருக்கு. அதுவே எங்கடை வாழ்க்கை யாய் மாறும்போது, அதற்கெல்லாம் மனித உழைப்புத்தான் மூலதனம். கொழும்பில் சிரட்டையில் செய்த தேத்தண்ணிக்கப் 2500 ரூபாய் விக்கிறாங்கள். இங்கை சிரட்டை அடுப்புக்கை வைக்கிறம், எரிக்கிறம். இதையே சேமித்துக் குடுத்தாலே வருமானமாகும். முன்னாள் போராளிகளென்று யாருமே பரிதாபமாய் பார்க்கத் தேவையும் இல்லை.

ம்... 'விடிந்தால் சாப்பாடுக்கு என்னவென்று தான் தெரிய யேல்லை' இரவு விடியாமலே இருந்தால் எப்படி இருக்கும்? மனம் வலித்தது சுமதிக்கு சிந்தனைகளிலிருந்து விடுபட்டு நித்திராதேவியின் அணைப்பிற்குள் பிடிகொண்டாள்.

கொரோணா நிவாரணமாக ஐயாயிரம் ரூபாய்வழங்கப் போவதாக ஜனாதிபதி அறிவித்துள்ள செய்தி சுமதிக்கும் சிறு நிம்மதியைக் கொடுத்தது. அம்மா... அம்மா... நாளையில இருந்து வைபர் கிளாஸ் நடத்தப் போறாவாம் ரீச்சர். கேள்வி விடைகள், வீட்டு வேலை, எல்லாம் அதிலை தான் போட்டு விடுவினமாம். நாங்கள் கொப்பியிலை செய்து பள்ளிக்கூடம் தொடங்கேக்க காட்ட வேணுமாம். அதுக்கு ஸ்மாட் போன் தான் வாங்க வேண்டுமாம்.

ஒரு நேர சாப்பாட்டுக்கே வழியில்லாத நாங்கள் முப்பதாயிரம், நாற்பதாயிரத்துக்கு வீடு வீடாய் களவா எடுக்கிறது? இருக்கிறதைப் படியுங்கோ. நான் ரீச்சரோட கதைக்கிறன். அதற்குப் பிள்ளை ரீச்சர் அடிப்பா... பேசுவா... என்று சிணுங்கியது.

# பள்ளிப் பகிடி



**ஆசிரியர் (கோபத்துடன்) - ராணி! நீ மறுபடியும் மாலதியின் வீட்டுப் பாடம் செய்திருக்கிறாய்? உனது கையெழுத்தை அவளது பயிற்சிப் புத்தகத்தில் பார்த்தேன்.**

**ராணி :-** (அப்பாவியாக) இல்லை சேர் நாங்கள் இருவரும் ஒரே பென்சிலைத்தான் பயன்படுத் தினோம்.

**கணித ஆசிரியர் :- மதன் உன்னுடைய அப்பா என்னிடம் ஆயிரம் ரூபா வாங்கியிருந்தார். அதனை மாதம் நூறு ரூபாய் படி தந்திருந்தார். அப்படியென்றால் ஆறு மாதத் திற்குப் பிறகு அவர் எனக்கு எவ்வளவு தர வேண்டும்?**

**மதன் :-** ஆயிரம் ரூபா சேர்

**கணித ஆசிரியர் :- உனக்கு கணக்குப் பார்க்கத் தெரியல்ல.**

**மதன் :-** சேர் உங்களுக்கு எங்கடை அப்பாவைப் பற்றித் தெரியல்ல

**உடற்கல்வி ஆசிரியர் :- கமல் உனக்கும் விளையாட்டுக்கும் வெகுதூரம் உன்னாலை முதலிடத்துக்கு வரவே முடியாது.**

**கமல் :-** நான் பந்தியில் எப்பவும் முதலிடம் தான் சேர்!

**ஆசிரியர் - சுந்தர் உலகம் உருண்டை என்பதற்கான மூன்று ஆதாரம் கூறு?**

**சுந்தர் -** அம்மாவும் சொன்னவா, அப்பாவும் சொன்னவர், இப்ப நீங்களும் சொல்லுறியள்

ஒழுங்காய்ப் பள்ளிக்கூடத்திலை வகுப்பு நடத்தத் தெரியாதவை இப்ப என்ன ஆட்டத் திலை போனுக்கை கிடக்கினம்? போனவை. சுகமா அனுப்பிப் போட்டு. நாங்கள் படிப்பிச் சானாங்கள் எண்டு காட்டவே?... இப்பதான் கண்டறியாத படிப்பும் படிப்பிக்கினம். பள்ளிக் கூடம் தொடங்கட்டும் பிள்ளை நான் பாக்கிறன் என்றாள் சுமதி. 'ரீச்சர் பேசுவா. அடிப்பா'. அம்மா. என்று அழுது அடம்பிடித்த மகள். அப்ப நான் கொலசிப்பாஸ் பண்றதில்லையா?

படிக்கிற பிள்ளை எப்பிடியும் படிக்கும். இருக்கிற அறிவுக்குப்படி. பாஸ் வந்தால் வரட்டும். இல்லாட்டி அது பிரச்சனை இல்லை.

இங்கை வெள்ளைக்காரன்ர படிப்பு ஒண்டும். எங்களுக்குப் போனிலை காட்டத் தேவை யில்லை. பள்ளிக்கூடம் தொடங்கட்டும் ரீச்சரிட்டை வாறன். திரும்பத் திரும்ப டீச்சரைப் பற்றிக் கதைக்காமல் அவைக்கு சொன்னால் விளங்கும். நாங்கள் என்ன களவுக்கா போறது? மண்டை வெடிக்குது எனக்கு. இருக்கிறதை வைச்சுப் படி நல்லா வந்து காட்டு. மகள் தாயின் கதையைக் கேட்டு சோகமாக ஆமோதித்தாள்.

"எங்களைத் தூக்கி எறிந்த சமூகத்திற்கு முன்னுக்கே நல்லா வந்து காட்டுவன். வாழ்ந்து காட்டுவன்... சுமதி... சுமதி.. சுமதி... பக்கத்தில் படுக்கையில் இருந்து புலம்பியவளை மெதுவாகத் தட்டி எழுப்பி-னான் வியாசன். உடல் வியர்த்து விறுவிறு-க்க எழும்பிய வேகத்தில் அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள். ஏன் என்னை எழுப் பினீங்கள்? கோபத்தில் முறைத்தாள். நான் வாழ்ந்து காட்டுவேன் நான் யாரென்று இந்த தேசம் முழுக்க பறந்து காட்டுவன் என்னால முடியும் என்றாள் சுமதி. தன்னை சுதாகரித் துக் கொண்டு வியாசன் அவளை அணைத்து தண்ணீர் போத்தலை கொடுத்தான். இரு பிள்ளைகளும் பக்கத்தில் ஆழ்ந்த உறக்கத் தில் இருந்தனர். நேரம் நான்கு மணி காட்டியது பறவை இனங்களின் ஓசைகள் வீதிவழி வாகனங்கள் விடியலை பாடியது.

போத்தல் மூடியைத் திறந்து தண்ணீர் கொஞ்சம் குடி. அடிக்கடி புலம்பாத நான் இருக்கிறன் துணைக்கு! உன் கனவு நிஜமாகும். ஆறுதலாய் கொஞ்ச நேரம் நித்திரை கொள் என்றபடி அவள் எண்ணங்களை வருடிக் கொடுத்தான். அன்பின் பிடியில் தன் கனவு கள்ள நிஜமாக்கும் எண்ணங்களுடன் தன் மனசை தயார்படுத்தத் தொடங்கினாள் சுமதி.

*யாழ் மாவட்ட மட்ட இலக்கியப் போட்டியில் (2020 -2021) முதற்பரிசு பெற்ற சிறுகதை*

# பஞ்சத்தில் அடிபட்ட புலி




உலக அளவில் பூனைகளுக் கான குத்துச்சண்டைப் போட்டி நடைபெற்றது. அனைத்துநாட்டு பூனைகளையும் வீழ்த்தி அமெரிக்காப்பூனை முன்னணி யில் இருந்தது. இந்தியப் பூனை. பாகிஸ்தான் பூனை. ஜெர்மனிப் பூனை. ஆஸ்திரேலியப் பூனை இப்படி அத்தனை நாட்டு பூனை களும் அமெரிக்கப் பூனையிடம் அடிவாங்கி சுருண்டு கிடந்தன!

அமெரிக்கப் பூனை யல்லவா? பாலும். இறைச்சியும் அளவிற்கு அதிகமாக உண்டு கொழுத்து கொழு கொழுவென இருந்தது. இப்பொழுது இறுதிச் சுற்று.... இந்தச் சுற்றில் அமெரிக்கப்பூனையிடம்சோமா லிய நாட்டுப் பூனை மோதப் போவதாக அறிவித்தார்கள். பார்வையாளர்களுக்கு வியப்பு! சோமாலிய நாட்டு பூனை நோஞ்சானாக மெலிந்து நடக்கவே தெம்பற்று தட்டுத் தடுமாறி முக்கி முணங்கி மேடையேறியது. இதுவா அமெரிக்க பூனையிடம் மோதப் போகிறது? பார்வையாளர்கள் கேலியும் கிண்டலுமாய் சிரித் தார்கள். போட்டி துவங்கியது. அமெரிக்கப் பூனை அலட்சிய மாக சோமாலியப் பூனை யின் அருகில் நெருங்கியது. சோமாலியப் பூனை முன்னாங் காலை சிரமப்பட்டு தூக்கி பறந்து ஒரேஅடி அமெரிக்க பூனைக்கு மண்டைக்குள் ஒரு பல்பு ப்பளீச் என்று எரிந்து படாரென வெடித்து சிதறியது. கண்கள் இருண்டு மயங்கி சரிந்தது. பார்வை யாளர்கள் அதிர்ச்சியில் வாயடைத்து நின்றார்கள். சற்று நேரம் சென்ற பின். மெதுவாக கண் விழித்துப் பார்த்த அமெரிக்காப் பூனைக்கு ஒன்றுமே புரியவில்லை.

சோமாலியப் பூனையின் கழுத்தில் தங்கப்பதக்கம் தொங் கியது. போட்டி யில் வென்றதற்காக சோமாலியப் பூனையை எல்லோ ரும் கைகுலுக்கி பாராட்டிக் கொண் டிருந்தார்கள். மெதுவாக எழுந்து சோமாலியப் பூனையின் அருகில் சென்று "இத்தனை நாட்டுபூனை களை வீழ்த்திய ப்லசாலியான என்னை நோஞ்சான் பூனையான நீ வீழ்த்தியது எப்படி?" என்று கேட் டது அமெரிக்கப் பூனை. அமெரிக் கப் பூனையின் காதில் மெதுவாக சோமாலியப் பூனை சொன்னது. "நான் பூனையே இல்லை.

புலியடா என்றது. என் நாட்டு பஞ்சத்தில் இப்படியாகி விட்டேன்." பாலும்.கறியும் உண்டாலும் பட்டினி கிடந்தாலும் புலி புலி தான் என்றது?

- தொகுத்து வழங்கியவர்
ஜெறாட் அனஸ்றினா பிகிறாடோ.
நன்றி முகப்புத்தகம்



# மகுடி பதில்கள்



**சுஜித்தா – வல்வெட்டி**

?. சிறிலங்கா அரசு போர்குற்றமே நடக்கவில்லை என்று அடம்பிடிக்கிறதே?


!. அடுத்து வரும் வருடங்களில் போரே நடக்கவில்லை என அடம்பிடித்தாலும் பிடிக்கும்.

**தனேசிகா – மாதகல்**



?. இலங்கையில் கொரோனா நோய் பாதிப்பு எப்படியுள்ளது?

!. கொரோனா நோயை விட வாத நோய்தான் எங்கட நாட்டை வாட்டி எடுக்கிறது. இனவாதம், மதவாதம், வகுப்புவாதம், தீவிரவாதம் இப்படியாக..!



**ரேணுகா – பருத்தித்துறை**

?. ஈழத்தமிழர்கள் அவலப்படுவதற்கு யார் காரணம்?

!. வாய்வீச்சுக்காரரும், வாள் வீச்சுக்காரரும் தான். அதாவது அரசியல் வாதிகளும், ஆவா (போன்ற) குழுவினரும் தான் காரணம்.!

**பார்த்தீபன் – உரும்பிராய்**



?. இந்த முறை ஜெனிவாவின் மனித உரிமை சபை அமர்வில் சர்வதேசம் தமிழருக்கு கைகொடுக்குமா?

!. கைகொடுக்காவிட்டாலும் காலை வாராமல் விட்டால் போதும்.



**கிருத்திகா – வல்வெட்டித்துறை**

?. அதிகரிக்கும் வாழ்க்கை செலவுக்கு காரணம் என்ன?

!. வரவுக்கேற்ப செலவு செய்யும் வழிவகை தெரியாதது தான்!

**நீகன் – கிளிநொச்சி**

?. சுதந்திரத்தின் பின் இலங்கை என்ன சாதித்தது ?

!. அந்நியர்களிடதிருந்து சுதந்திரத்தை வாங்கிவிட்டு தன் நாட்டு மக்கள் ஒரு சாராரின் சுதந்திரத்தை பறித்துக்கொண்டது.

**தனு – தெல்லிப்பழை**

?. என்று தீரும் வெளிநாட்டு மோகம்?

!. தன் மண்ணின் மீதான பற்றுமேலோங்கும் போது!

**தேவா – யாழ்ப்பாணம்**


?. அரச ஊழியரும் பகுதி நேரமாக வேறு வேலை செய்யலாமென அரசு கூறுகிறதே?

!. வரும் காலத்தில் அரசாங்கத்திலும் பகுதி நேர வேலைதான் கிடைக்கும் என எச்சரிக்கிறது போலும்..

**கோபாலன் – சுன்னாகம்**

?. புதுவருசத்திலும் வருமா கொரோனா?

!. எவரும் வரவேற்காமல், எதிர்பார்க்காமல் வந்து குடியேறுவது தானே வைரஸ். இதற்கு கொரோனாவும் விதிவிலக்கில்லையே!



**வட்சன் – மல்லாகம்**

?. தமிழ் சீரியல் நடிகைகள் தற்கொலை செய்கிறார்களே?

!. சீரியல் பார்த்தே பலர் தற்கொலை செய்கிறார்களே....!

**பரன் – பளை**



?. ஊழல் செய்யும் அரசியல்வாதிகள் கையசைத்து; சிறைக்கு செல்கிறார்களே?

!. நாட்டின் நீதித்துறை தம்மை கைவிடாது காப்பாற்றி விடுதலை செய்யும் என்ற நம்பிக்கையால் தான்..

**லேனுகா – யாழ்ப்பாணம்**

?. மோடியாருக்கும், மகுடியாருக்கும் என்ன வித்தியாசம்?

!. மோடியார் இந்து மதத்தின் அடிப்படையில் சிந்திப்பார். மகுடியார் இந்த மனிதத்தின் அடிப்படையில் சிந்திப்பார்.




**கந்தசாமி – புத்தூர்**

?. கட்சிகள் எல்லாம் நிவாரணம் கொடுத்தால் எப்படி இருக்கும்?

!. கட்சி அலுவலகங்கள் எல்லாம் அகதிமுகாம்கள் ஆகிவிடும்.

**கிந்துஜன் – மட்டக்களப்பு**

?. ஆபத்தில் உதவாதவன் எப்படிப்பட்டவன்?

!. நண்பனாக மட்டுமல்ல மனிதனாக இருக்கக் கூட தகுதியற்றவன்.

**லாவன்யா – நெல்லியடி**

மந்திரிக்கும் மருமகனுக்கும் என்ன வித்தியாசம்?

!. மந்திரி மக்களை சுரண்டிப்பிழைப்பவன். மருமகன் மாமனைச் சுரண்டிப்பிழைப்பவன்.

**மரீனா – புத்தளம்**

?. கொரோனா என்று சொல்கிறார்களே! இதற்கு ஏதும் தீர்வுண்டா?



!. வல்லாண்மை பேசும் வல்லரசுகளே இந்த வைரஸ் முன்னால் வலிமையற்று நிற்கின்றனவே.!

**அனஸ்ரீனா – மன்னார்**

?. நமது நாட்டில் ஜனநாயகம் காப்பாற்றப்படுமா?

!. பணநாயகர்கள் அதிகாரத்தில் இருக்கும் நாட்டில் ஜனநாயகம் தப்பிப்பிழைப்பது சந்தேகம்தான்..!

**கபிலன் – அச்சுவேலி**

?. ஒரு நாடு நாசமாய் போவதற்கு யார் காரணம்?

!. இனவாதிகளாக இருக்கும் மதவாதிகள் மட்டுமே!



**மனாஸ் – சுண்டுக்குளி**

?. வேட்பாளருக்கும், வாக்காளருக்கும் என்ன வித்தியாசம்?

!. வாக்குறுதிகளை மட்டும் வழங்கிவிட்டு ஏமாற்றுபவர்கள் வேட்பாளர்கள். வாக்குகளை அள்ளி வழங்கிவிட்டு ஏமாந்து நிற்பவர்கள் வாக்காளர்கள்.

**நந்தா – நுவரெலியா**

?. நாட்டுப்புறங்களில் பேயடிச்சு சாகின்றதாக கதைக்கிறார்கள். நீங்கள் அதை நம்புகிறீர்களா?



!. பேயடிச்சு சாகின்றார்களோ என்னவோ தெரியவில்லை. ஆனால் நம்மை பேயராக்கி பலர் வாழ்கின்றார்கள் என்பது மட்டும் உண்மை!

**தர்மீகன் – அளவெட்டி**

?. தை பிறந்தால் வழி பிறக்கும் என்று கூறுகின்றார்களே! அது எந்த வருட "தை" என்று கூறமுடியுமா?

!. சம்பந்தா சம்பந்தமில்லாமல் சம்பந்தர் ஐயா அந்தக்காலம் முதல் கூறிவருவதை பற்றியா கேட்கிறீர்கள்?

**சரவணா – கொழும்பு**

?. அரசியல் வாதிகள் பெரும்பாலும் ஏன் வெள்ளை நிற உடைகளை அணிகிறார்கள்?

!. கவிஞர் கண்ணதாசன் அரசியல்வாதிகளை வெள்ளைவேட்டிக் கள்ளர் என்று வர்ணித்ததை உண்மையாக்கப் போலும்.

**கோபால் – திருகோணமலை**

?. சமாதானத்திற்கு வெள்ளைப் புறாவை அடையாளப் படுத்துகிறார்களே?

!. ஒற்றுமைக்கு கறுப்புக்காகத்தை அடையாளப் படுத்துகிறார்களே! ஒற்றுமை இருந்தால் தானே சமாதானம் ஏற்படும்! பொருத்தமான ஒப்பிடுதானே!

**கமிலஸ் – நாவாந்துறை**



?. தேர்தல் காலத்தில் மட்டும் தலை காட்டும் வேட்பாளர்கள் எப்படிப்பட்டவர்கள்?

!. மாரி காலத்தில் மண்டை அதிரக் கத்தும் தவளைகளைப் போன்றவர்கள்.

**சோமு – கண்டி**

? ஜனநாயகம் என்றால் என்ன?

! பெரும்பான்மை இனத்தவர் சிறுபான்மை இனத்தவரை அடக்கி ஆள தேர்தல் மூலம் பெற்றுக் கொள்ளும் அதிகாரத்திற்கு பெயரே ஜனநாயகம்!

**வேந்தன் – வண்ணார் பண்ணை**

?. வரலாறு மனிதரை உருவாக்குகிறதா? வரலாற்றை மனிதன் உருவாக்குகின்றானா?

!. வரலாறு மனிதனால் உருவாக்கப்படுகிறது. வரலாற்றில் மனிதன் வாழ்கின்றான். அவ்வளவுதான்.

கருணாகரன் – ஆவரங்கால்

?. இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீன.. இந்திய.. அமெரிக்க வல்லரசுகளின் மேலாதிக் கப் போட்டி பற்றி என்ன சொல்கிறீர்கள்..?



!. அழகிய பரந்த நீலக் கடல் பிரதேசத்தை செங்கடலாக மாற்றாமல் இருந்தால் போதும்.

மது – அராலி

?. ஆன்மீக அரசியல் என்று ஒரு புதிய அரசியல் நெறி பற்றி பரவலாகப் பேசப்படுகிறதே?

!. அரசியல் வாதியை தலைவராகப் பார்க்கும் காலம் போக.. கடவுளாக...காட்ட முயலும் ஒரு முயற்சியே ஆன்மீக அரசியல்.. வாக்காளரின் நிலை மட்டும் ஒன்றே.. அரசியல் வாதிக்கும் தொண்டன் தான் ஆண்டவனுக்கும் தொண்டன் தான்.

சுவர்ணன் – நவக்கிரி

?. அன்றைய தமிழ் படப்பாடல்களுக்கும் இன்றைய தமிழ் படப்பாடல்களுக்கும் என்ன வேறுபாடு?

!. அப்போதைய பாடல்களில் இசை கொலுவீற்றிருந்தது. இன்றைய பாடல்களில் வசை குடியேறியுள்ளது.

கண்ணன் – பள்ளிமுனை

?. அண்மையில் பெய்த பெருமழையால் யாழ்.மாநகரம் ஒரே வெள்ளக் காடாக இருந்ததே!

!. ஆமாம்! மாநகரம் மாநரகமாக இருந்தது அப்போதுதான்!

காதம்பரி – சங்கானை

?. தற்போது வரும் தமிழ்ப் பேய்ப்படங்களில் வரும் பேய்க ளெல்லாம் பெண் பேய்களா- கவே உள்ளனவே..! ஆண் பேய்களே இல்லையா?



!. ஆண்கள் பேயர்களாகி வெகு காலமாகி விட்டது தம்பி...!

# கதைத்தேன்.

## நினைவுகள்



அந்தப் பெண்ணில் வைத்த கண் வாங்காது அவளையே பார்த்துக் கொண்டு நின்றான் அவன். இதைக் கவனித்த அவளின் கணவன் கோபம் கொண்டவனாய் அவனைத் தாக்கிவிட்டு "கழுதை! வாழ்க்கையில் நீ பெண்களைக் காண வில்லையா?" எனக் கேட்டான். கன்னத்தில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு. போன மாசம்தான் என் சகோதரி அகால மரணமானாள். அவள் உங்கள் மனைவி போல் இருப்பாள். சகோதர பாசத்தால் உங்கள் மனைவியைப் பார்த்தேன். என்னை மன்னியுங்கள் என்றான்.

# மாத்திரைக் கதை


## சுதந்திரம்

**தூ**ணில் சங்கிலி கொண்டு கட்டப்பட்டுக் கிடந்த நாயை மேலே தொங்கிய கூட்டில் அடைபட்டுக் கிடந்த கிளி பார்த்து. அண்ணா நமக்கு எந்த காலத் திலுமே சுதந்திரம் கிடைக்காதா? என்று ஏக்கத்தோடு கேட்டது.நாய் படு எரிச்சலோடு கிளியைப் பார்த்து தம்பி இந்த வீட்டு எஜமான் போடும் உணவை இது நாள் வரை சாப்பிட்டு கொண்டுதானே நாம் சீவிக்கிறோம். இந்த அடிமைச் சாப்பாட்டை ஏற்பதை விட உண்ணா மல் இருந்து நம் உயிரை விடுவது மேல் என்று ஒரு தடவையாவது நாம் எண்ணி னோமா? என்று கேட்டது. கிளி ஒன்றும் பேச வில்லை.நம் எஜமான் நாளைக்கு ; வைக்கப்போகும் அடிமைச் சாப்பாட் டையும் நாம் சாப் பிடத்தானே போகி றோம் என்று நாய் சொன்னது. கிளி உண்மைதான் என்று சொல்லி விட்டு ஒரு நீண்ட பெருமூச்சை விட்டது. நாய் சொன்னது அப்புறம் நமக்கு என்ன சுதந்திரம்?.



-காசி ஆனந்தன்-

## ஜென் கதை



# சொர்க்கமும் நரகமும்

நம்மில் பலர் சொர்க்கம், நரகம் என்றெல்லாம் சொல்லுகிறோம். ஆனால் சொர்க்கம் என்று ஏதாவது உலகம் தனியாக இருக்கிறதா? அப்படியானால் அது எங்கே இருக்கிறது? எப்படி போகவேண்டும்? நரகம் எங்கே? எப்படி வழி? ஏதாவது தெரிகிறதா? இதற்குப் பல்வேறு விளக்கங்களை சொல்கிறார்கள். ஆனால் ஒன்று நிச்சயம், நல்லது சொர்க்கம் கெட்டது நரகம்.
ஜென் குருமார்களின் கதை இதற்கு ஒரு விளக்கம் தருகி றது. ஒரு ஜென் குருவிடம் போர்த் தளபதி ஒருவர் வந்தார். குருவிடம், "குருவே, சொர்க்கம், நரகம் என்கிறார் களே அது என்ன? சற்று விளக்கமாக சொல்லுங் கள்," என்றார்.

"நீ யார்?" என்றார் குரு. "நான் ஒரு போர்த் தளபதி" என்றார் தளபதி
"அப்படியா? சாப்பாட்டுக்கு என்ன செய்கிறாய்?"
தளபதி கோபத்துடன்,
"நான் தளபதி புரியவில்லையா?"
"எந்த மடையன் உன்னை தளபதியாக வைத்துக் கொண்டான்?" என் பார்வைக்கு நீ ஒரு கசாப்புக் கடைக்காரனாகத்தானே தெரிகிறாய். இதற்கு மேல் தளபதிக்குப் பொறுக்க முடியவில்லை. வாளை உருவிக்கொண்டு குரு மீது பாய்ந்தார்.
"இதுதான் நரகத்தின் வாசல் இதே மாதிரி போனால் நரகத்திற்கு உள்ளேயே போய்விடலாம்.
ம்! " போ..." என்றார் குரு.
தளபதிக்கு வெட்கமாக இருந்தது மண்டியிட்டு தலை குனிந்து நின்று குருவிடம் மன்னிப்பு கேட்டான். வாளை உறையில் போட்டான். குரு சொன்னார்.
"இதுதான் சொர்க்கத்தின் வாசல். இப்படியே உன் நடவடிக்கை தொடருமானால் நீ சொர்க்கத்துக் குள்ளேயே போகலாம். ம்! " போ..." சீறிப் பாய்ந்தால் நரகம், மன்னிப்புக் கேட்டு நாணுவது சொர்க்கம்."
இதைவிட அதிசயம் சொல்லவா?
கலப்படம் செய்து வியாபாரம் செய்த வியாபாரியிடம், ஒரு சாமியார் வந்து, "கலப்படம் செய்தால் நரகம் நிச்சயம், கலப்படம் செய்யாமல் விற்றால் சொர்க்கம் உறுதி. உனக்கு எங்கு போக விருப்பம்?" என்று கேட்டார்.

வியாபாரி சொன்ன பதில் இதுதான்,
"எங்கே வியாபாரம் நல்லா நடக்குமோ, அங்கே போகவேண்டியது தான்."
இது எப்படி இருக்கு?




**வாக்குச் சீட்டு:** சுயநலப் பற்றில் வழங்கும் வரவேற்புப் பத்திரம்.

**நேர்முகப்பரீட்சை:** சிபார்சு செய்யப்பட்டவர்களை எடுப்பதற் காக ஏனைய மற்றோருக்குக் காட்டும் கண்கட்டி வித்தை.

**கார்:** பஸ் சேவையில் நம்பிக்கை இல்லாதவர்கள் பாவிக்கும் வாகனம்.

**பிரதான வீதி:** கடன்காரன் விரும்பாத பாதை.

**மூட்டைப் பூச்சி:** மனிதனின் இரத்த உறவு.

**தர்மம்:** மோட்சம் போக விரும்புவோர் கொடுக்கும் லஞ்சம்.

**சதி:** பதவி ஏணி.

**பிறந்தநாள் கொண்டாட்டம் :** டாக்ரர் கையிலிருந்து தப்பிய வர்கள் கொண்டாடும் கொண்டாட்டம்.

## அந்தக்கால தேர்தல் மொழிகள்



1. தேர்தல் வரும் பின்னே! பிரச்சாரம் வரும் முன்னே!
2. தேர்தலில் தோற்றவன் கட்டுப்பணம் இழக்கவில்லை என்றானாம்.
3. தேர்தல் வரை மாமா மச்சான் தேர்தல் முடிந்ததும் நீ யார்? நான் யார்?
4. தேர்தல் முடிந்தும் கதை முடியவிடியல்லை.
5. வேட்பாளர் கூட, வசையும் கூடும்.
6. வலது சாரிகளுக்கு ஒரு காலம் இடது சாரிகளுக்கு ஒரு காலம்.
7. மந்திரியும் (ஒரு காலம்) தேர்தலில் தோற்பார்.
8. துள்ளுகின்ற வேட்பாளர் சோர்ந்து விழுவார்.
9. தேர்தல் வரும் வரை நோயாளர்கள் இருப்பார்களா?
10. சனமுள்ளபோதே பிரச்சாரஞ் செய்.

இந்தக் காலத்திற்கும் எப்படிப் பொருந்துகிறது பாருங்கோ!

– இரா. தர்மலிங்கம்



வெற்றிநடை
உலகை வலம் வரும் உற்சாகம்...!
"லண்டனிலிருந்து மூலை முடுக்கெங்கும்
உள்ள எம் ஆளுமைகளைத்
தேடும் ஒரு பயணம்..."
கொவிட் - 19 செய்திகள்
வாழ்த்துக்கள்
செய்திப்பக்கம்
நிகழ்வுகள்
உரையாடல்கள்
உலக சாதனை
விளையாட்டு
சமூகப்பதிவு ஆய்வு
செய்திகளை
உடனுக்குடன் பார்வையிட...
WWW.VETRINADAI.COM
எப்போதும் நாங்கள் ஊர்ப் பெடியள்தான்...
எங்கும் உற்சாகம்...!
எதிலும் உத்வேகம்...!
அனைவருக்கும் நேசக்கரம்...
vetrinadai@outlook.com



## சிரிகதை

# உயிர் எனக்கொரு தூசு



குமார் தனபால்

மணலில் உட்கார்ந்து விட்டு எழுந்தவன் தன் உடையில் ஒட்டியிருந்த மணலை தட்டிவிட்டு நடப்பதைப் போல.. இந்த உலகத்தில் உள்ள சகல உறவுமுறைகளையும் என் வீட்டு படலையுடன் உதறி எறிந்துவிட்டு வீதியில் இறங்கி நடந்தேன்.

உஸ் என்ன வெய்யில்! அடடா.. செருப்பைப் போடாமல் வந்து விட்டேனே..

சே.... உயிரையே ஒரு தூசாக மதித்து தற்கொலை செய்யப் போய்க் கொண்டிருக்கும் எனக்கு செருப் பெதற்கு-குடை எதற்கு ? வெய்யிலென்ன.. மழை என்ன எல்லாமே எனக்கு ஒன்றுதான்.

நான் உழைக்கத் தெரியாதவனாம் வெட்டிச் சோறு தின்று உடம்பை வளர்க்கும் சோம்பேறியாம். என் தந்தையே என்னை இப்படி ஏசி விட்ட போது.. எனக்கு உயிர் ஒரு தூசுதான்! நல்லூர் சந்தியால் திரும்பி ரெம்பில் றோட்டில் கால் வைக்கும் போது - கந்தசாமி கோவிலில் பகல் பன்னிரண்டு மணிப்பூஜைக்கான மேளதாள ஒலி காதில் விழுந்தது. நான் நாள் தோறும் பயபக்தியுடன் வணங்கும் தெய்வம் அது என் பக்திக்கு அந்த நல்லூரன் நன்றி செலுத்தியிருந்தால். பாய்ந்து வரும் யாழ்தேவி குபீரெனப் பாய்ந்து என் உடலை துண்டு துண்டாக்கும் இறைச்சிக்கடை வேலைக்குநானே துணிந்து இறங்கியிருப்பேன்..?

கோவில் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்காமல் அலட்சியமாக நடந்தேன். என் முன்னே போய் வரும் மனித முகங்களை உற்று உற்றுப்பார்க்கிறேன்

ஏ.. மடை மனித ஜென்மங்களே..! நீங்கள் இந்த உலகத்தில் வாழ்ந்து எதைத்தான் சாதித்துவிட்டீர்கள்? துன்பத்தைக் கண்டு அஞ்சுகறீர்கள் வெறும் கடதாசித் துண்டாலான பணத்திற்கு உயிருக்கும் மேலான மதிப்பு கொடுக்கிறீர்களே.. சாவை மதியுங்கள். என்று நடு வீதியில் நின்று கத்த வேண்டும் போலிருக்கிறது. ஆனால் இரண்டு காதுகள் படைத்த மனித சாதிகளுக்கும் எந்தப் பக்கத்தில் நின்று கத்தினாலும் அது மறுபக்கத்தால் வெளிச்சென்று விடுமே!

மௌனமாக நடக்கிறேன். என்னடா மச்சான் வெய்யிலுக்கை வலு ஆறுதலாக எங்கை பயணம்..?

என் நண்பன் சோமு தான் தன்வீட்டுப் படலையின் நின்று இப்படிக் கேட்கிறான். "ஓமடா பயணம் தான் போகிறேன். திரும்ப முடியாத பயணம்." யாராலும் திருப்ப முடியாத பயணம் தான் போகிறேன்... இப்படி பதில் கூறிவிட்டு அவனைக் கடந்து அப்பால் நடந்தேன். எதற்கெடுத்தாலும் இப்படித் தான் பதில் கூறுவது அவனுக்கு பழகிப்போன தொன்று சிரித்தபடி என்னையே பார்க்கிறான். நடக்கின்றேன்!

ஐயகோ வெய்யில் உச்சிமண்டையைப் பிய்த்து விடும் போலிக்கிறதே...! தார் றோட் உருகி அடிப்பாதங்களில் ஒட்டி இழுபடுகிறதே.. எட்டி பாய்ந்து வேலி ஓரத்தால் நடக்கின்றேன். வாழ்க்கையின் ஓரத்திற்கே தற்கொலை செய்யப்போய்க் கொண்டிருக்கும் நான் இனி எந்த ஓரத்தால் நடந்தாலென்ன..

கைக்கடிகாரத்தை திருப்பிப்பார்த்தேன் பன்னிரெண்டுமுப்பது

சரி.. சரி.. இன்னும் ஒரு மணி நேரத்தில் கொழும்பில் இருந்து புறப்பட்டு வரும் யாழ்தேவி யாழ்ப்பாணத்தை வந்தடைந்து விடும் இதற்கிடையில் ரெம்பில் றோட்டில் இருக்கும் அந்தக் கதவுகள் இல்லாத ரெயில் பாதைக் குறுக்குக்குச் சென்று விட வேண்டும்- ஆள் நடமாட்டம் இல்லாத தகுந்த இடம் அது தான். இதற்கு முன்பும் இரண்டு பேர்கள் என்னை போல தங்கள் உயிர்களைத் துச்சமென மதித்து பாய்ந்து பரலோகம் சென்றிருக் கிறார்கள்.

இப்போது நான் மூன்றாவது ஆள்.

விறு விறுவென நடந்து கைலாசப்பிள்ளையார் கோவிலடியை அண்மித்ததும் சொக்கனின் தேனீர்க் கடையில் சுத்தமான தேங்காய் எண்ணெயில் கடலை வடைகள் பொரியும் மணம் என் மூக்கை துளைத்தது. அடடா... உமிழ் நீர் சுரக்கிறதே! உயிரை ஒரு தூசாக மதித்து தற்கொலை செய்யப் போய்க் கொண்டிருக்கும் இந்த உடலில் ஒட்டியிருக்கும் நா சொக்கனின் கடலை வடைக்காக ஏங்குகிறதே...! நா ஏங்குகிறது- ஆத்மா ஆசைப்படுகிறது- என்ன செய்யலாம்..


சகலவிதமான பாடசாலை
உபகரணங்களையும் புத்தகங்களையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றிட
பூபாலசிங்கம் புத்தகசாலை
Poobalasingam Book Depot
JAFFNA
Hospital Road,
Jaffna.
Tel : 021 222 66 93
COLOMBO
202, Sea Street,
Colombo - 13.
Tel : 011 242 2321
WELLAWATTE
309, A 2/3 Galle Road,
Colombo - 06
Tel : 011 451 5775
70 வருடங்களை கடந்து...


ISHA FARM
ஒரு நாள் குஞ்சுகள் மற்றும் மேய்ச்சல் முறையில் வளர்க்கப்பட்ட ஆரோக்கியமான கோழிக்குஞ்சுகளையும் எங்களிடம் பெறலாம்.
தாய்: உது ஏன்ரா இவ்வளவு பெரிய கொட்டில் போடுகிறாய், ரியூசன் நடத்தப்போறியோ?
பட்டதாரி மகன்: இல்லையம்மா கோழி வளர்க்கப் போறன்
தாய்: உதுக்குள்ள ஆயிரம் கோழியெண்டாலும் விடலாம் போல அவ்வளவு கோழிக்குஞ்சுகளுக்கு எங்கே போறது? அதுவும் தரமான ஆரோக்கியமான கோழிக்குஞ்சுகள் வேணுமே.
பட்டத்தாரி மகன்: அதுக்குத் தானே எங்கட ஈசா பாம் இருக்குது. எத்தனை ஆயிரம் தரமான கோழிக்குஞ்சுகள் எண்டாலும் வாங்கலாம்.
ISHA FARM
வயாவிளான்-அச்சுவேலி வீதி, வயாவிளான் கிழக்கு, யாழ்ப்பாணம்.
ISHA FARM
Email : ishafarm4organic@gmail.com Tell : +94 76 869 6699 Web : www.ishafarm.com

சிறையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நபருக்கு கடைசி நேரத்தில் அவர்கள் விரும்பும் ஆகாரத்தை சுவைக்கக் கொடுப்பார்களாம்.

இப்போது இந்த ஆத்மாவின் கடலை வடை ஆசையை நிறைவேற்றாமல் நான் தற்கொலை செய்து கொண்டால்.. இறந்த பின் கடலை வடைக்காக என் ஆவி சொக்கனின் கடையையல்லவா சுற்றத் தொடங்கிவிடும். விசுக்கென கடைக்குள் நுழைந்தேன். தம்பிக்கென்ன...? துரித கதியில் பரிமாறிக்கொண்டிருந்த சொக்கன் இப்படி என்னை கேட்டார்.

ஐந்து கடலை வடை ஒரு சாயம் என்று சொல்ல வாயெடுத்த நான் பத்து கடலைவடை சீனிபோட்டு ஒரு பால் ரீ. என ஓடர் கொடுத்து விட்டு வாய்மூடவில்லை! தட்டு நிறையக் கடலை வடைகள் கம கம மணத்துடன் என் முன் வந்து விழுந்தன.

அப்பாடா.. வயிறுநிறைந்த சுகம் வயிற்றைத் தட்டிக் கொடுத்த படி காசுமேசை முன் அசைந்தேன்.

சே! உயிரை ஒரு தூசாக மதித்து தற்கொலை செய்யப் போய்க் கொண்டிருக்கும் நான் இந்த அற்ப சுகத்தில் திளைத்து விட்டேனே! பத்துக் கடலை வடை ஒரு பால் ரீ, ஒரு சிகரெட் அப்ப... தம்பி இரண்டு ரூபா பதினைந்து சதம். கடைக் காரச் சொக்கன் இராகம் போட்டிழுத்து கணக்கை கூறினார். சட்டைப் பையில் கையை விட்டிழுத்தேன். ஒரே ஒரு ஐந்து ரூபாய் தான் அலட்சியமாக மேஜையில் விட்டெறிந்துவிட்டு சிகரட்டை மூட்டியபடி வீதியில் கால் வைத்தேன்.



"தம்பி மிச்சக்காசு வேண்டாமல் போறீர்..?" சொக்கனின் இராகம் தவறாத குரல் "உயிரை ஒரு தூசாக மதித்துத் தற்கொலை செய்யப்போய் கொண்டிருக்கும் எனக்கு மிச்சமும் சொச்சமும்" கேட்காதவனைப் போல் விறுவிறு வென நடந்து கைலாசப்பிள்ளையார் கோவில் சந்தியை கடந்து - மீண்டும் கைக்கடிகாரத்தைப் பார்தேன். நேரம் ஒரு மணி. இன்னும் அரைமணி நேரத்தில் கைவேறு கால்வேறு.. குடல் மூளையெல்லாம் சிதறி கோழி குப்பையை கிளறிவிட்டதைப்போல் யாழ்தேவி எனும் இராட்சத இரதம் என் உடலைக் கிளறிவிட்டுச் செல்லப்போகிறது.

நடையைத் துரிதப்படுத்தினேன். இதோ றக்கா றோட்டுச் சந்தியைக் கடந்து அந்த கதவுகள் இல்லாத இரயில் பாதைக் குறுக்கை அண்மித்து விட்டேன் தூரத்தில் யாழ்தேவியின் இரைச்சல் கேட்கிறது.

சுற்றும் முற்றும் பார்த்தேன் ஜனநடமாட்டம் அதிகம் இல்லை. வேட்டியை மடித்துக்கட்டி கூவி வரும் யாழ்தேவி முன் பாய்ந்து ஆவியைப் போக்கிக் கொள்ள என்னை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தபோது... என் பின்னால் ஏதோ ஒரு உறுமல் சத்தம்! திரும்பிப் பார்த்தேன்!

இதென்ன... நாயா.. மாடா..! எந்த பெரிய அல்சேசன் நாய்! இதேன் இந்த நேரத்தில் என்னை பார்த்து உறுமுகிறது?

சே! உயிரை ஒரு தூசாக மதித்து தற்கொலை செய்ய வந்து நிற்கும் நான் கேவலம் இந்த நாயின் உறுமலுக்கு பயப் படுவதா...? கூடாது சண்டிக்கட்டை இறுக்கி... அதோ.. அதோ... யாழ்தேவி என்முன் பேரிரைச்சலுடன் வந்துகொண்டிருக் கிறது. இனி என்ன.. இன்னும் சொட்டுத்தூரம் கண்களை மூடிக்கொண்டு பாய வேண்டியதுதான்!...

"லொள்!" "லொள்!" வெடுக்கெனத் திருப்பிப் பார்த்தேன். அந்த நாய்தான் குலைத்துக்கொண்டு என்னை நோக்கியல்லவா வந்து கொண்டிருக்கிறது;;!

"லொள்" "லொள்!" "லொள்!" என்னை நோக்கிப் பாய்ந்து கொண்டல்லவா வருகிறது?

சூ... அடி!... அடிக்!

"லொள்!" "லொள்!" "லொள்!" "லொள்!" ஐயோ நாயைப் பிடியுங்கோ! நாயைப் பிடியுங்கோ...?

இப்படி கத்தியபடி வந்த வழியே திரும்பி ஓடுகின்றேன். றக்கா றோட்டு சந்திப்பிள்ளையார் கோவில் சந்தி இவைகளை மின்னல் வேகத்தில் கடந்து மேல் மூச்சு வாங்க சொக்கனின் கடைக்குள் ஓடி வந்து புகுந்த நான், மெதுவாக எட்டிப் பார்த்தேன். என்னைத் துரத்தி வந்த நாயைக் காணவில்லை.

யாழ்தேவியும் அந்த இரயில் பாதைக் குறுக்கைக் கடந்து சென்றுவிட்டது! சே! என் தற்கொலைத் திட்டத்தை மட்டம் தட்டி விட்ட நாயைத் திட்டித் தீர்த்தேன்.

நான் தற்கொலை செய்யப்புறப்பட்ட நேரம் சரியில்லையோ சரி... சரி... யாழ்தேவி எங்கே போய் விடப்போகிறது. கொழும்புக்கு போனால் திரும்பவும் நாளை மதியம் யாழ்ப்பாணம் திரும்பித்தானே ஆக வேண்டும். என் தற் கொலைத் திட்டத்தை மறுநாள் ஒத்திப் போட்டபடி..

'சொக்கண்ணே அப்போதை மிச்சக்காசை விட்டிட்டுப் போட்டன்; என்று கூறி மிகுதிப்பணத்தையும் பக்குவமாகப் பெற்றுக்கொண்டு வீடு நோக்கி நடந்தேன்.

என்றாலும்.. ...

*உயிர் எனக்கொரு...*

# WILSON ESTATE



கமல் : என்னடா இன்டைக்கு ஒரு மாதிரி இருக்கிறாய் ?
சுரேன் : அடேய்..! ஊரில காச கொட்டி வீடு கட்டினன்,
பராமரிக்க ஆளில்லை, வீட்ட பார்க்க விட்டவனையும்
கட்டி மேய்க்கேலாம இருக்கு..
கமல் : ஏன்டா மச்சான்...! அனுபவமுள்ள "வில்சன் எஸ்டேட்டிடம்" வீட்ட
பொறுப்பக் குடேன்.
சுரேன் : அது யாரப்பா "வில்சன் எஸ்டேட்" ?
கமல் : அவங்களிட்ட தான் என்ர வீட்டையும் பாராமரிக்க
குடுத்திருக்கிறன்.. அதால தான் நான் நிம்மதியாய் இருக்கிறன்
சுரேன் : நானும் இப்பிடி ஒரு நிறுவனத்ததானே தேடுறன்......





**சகல விதமான வீடு,வியாபார கட்டிடங்கள்,விவசாய நிலங்களை
பராமரிக்கவும் விற்கவும் நாடுங்கள் WILSON ESTATE**

ESTATE SALE







vayavilan jaffna,
sri lanka.
0124 682 2138
enquiries@wilsonestateagents.co.uk
www.wilsonestate.ik

**Call Us...**
**0777 999 696**
**0779 999 693**
yegan23@gmail.com

## அன்றும் ... இன்றும்...

பொருட்கள் வரத்து இல்லை






வேந்து - பெரிய காரில் போகிறாரே பெரிய தொழில் அதிபரா?

பாரி - ஆமாம் அவர் மஞ்சள், உளுந்து விவசாயம் செய்கிறார்.



கந்து :- பை நிறையக் காசோட எங்க போறாய்?

செந்து :- சந்தைக்கு மரக்கறி வாங்கப் போறன்



கொழும்பு வேலையோ அது தூரம் மனிசி பிள்ளைகளைத் தனியாக விட்டுட்டு வர ஏலாது!

என்ன லண்டனில் வேலையோ? எப்ப போகனும்? என்ர மனிசி கெட்டிக்காரி அவள் எல்லாத்தையும் சமாளிப்பாள்.



வெள்ளைக்கார பிள்ளைகள் எல்லாம் புக் சொப்பில் நிக்குது. ஆனால் எங்கட பிள்ளைகள் பேஸ்புக்கில் நிக்குது.



வட்சு : ஏன் இந்த வயதிலும் உன்ர மகனுக்கு அரசாங்க உத்தியோகம் வேணும் என்கிறாய்?

டிலு :ஹி ஹி ஹி

அப்பத்தான் நிறைய சீதனம் வாங்கலாம்.

நந்தாவுடன் சிரியுங்கள்...




## ஒரு வாக்குவாதம்



தொலை பேசி
கைபேசியை பார்த்து
திட்ட தொடங்கியது
பண்பாடு அற்றவளே
ஊர் ஊராய் சுற்றி திரிகிறாய்
எந்த நேரமும் மற்றவர்களின்
கையைப் பிடித்துக்கொண்டு
காதிலையும் வாயிலையும்
முத்தங்கொடுத்து கொண்டு
அலைகிறாயே!
கொதித்தெழுந்தது
கைபேசி
அதுதான் நீ வீட்டிலேயே
இருந்துகொண்டு
உடம்பு ஊதிக்கொண்டே
போகிறாய் - என்னைப்
பார்த்தாயா? எவ்வளவு
சிலிம்மா ஒல்லியா சின்னனாய்
இருக்கிறேன்
உனக்கு வயதில் மூத்தவள்
சொல்கிறேன் எனக்கு
வாய் காட்டிடாதே
உன்னால் எல்லோரும்
துன்பப்பட்டுக்கொண்டே
இருக்கிறார்கள்
மாணவர்களின்
கல்வி பாழ்
காதலனின்
பணப்பை பாழ்
உழைப்பாளியின்
ஊதியம் பாழ்
தொடர்ந்து பட்டியல் போட்டது
தொலைபேசி.
அக்கா என் கொக்கா
யாரும் யாரையும் கெடுப்பதில்லை.
அவரவர் தான் கெடுக்கிறார்கள்
அளவோடு பயன்படுத்தினால்
எல்லாம் அமிர்தமே
அளவுக்கு மிஞ்சினால்
அமிர்தமும் நஞ்சே

- ருஜித்திரா விமலதாசன்-
யாழ்ப்பாணம்




# வரலாற்றின் மகள்

தந்தையே! வரலாறு முழுவதும்
இப்படித்தான் இருந்ததா?
நாங்கள் எப்போதும்
அடிமையாகவே இருந்தோமா?

என் சிறு குழந்தையே
நீ ஆக்கிரமிப்பாளர்களையும் அறிவாய்
பாதுகாவலர்களையும் அறிவாய்

நம்முடைய மூதாதையர்
தம்மைத்தாமே ஆண்டனர்
எம் நிலத்தின் அரசுகளை
அந்நியர் விழுங்கிக் கொண்டனர்

தந்தையே போர்த்துக்கீசியர்கள் போய்விட்டனர்
ஒல்லாந்தர்கள் வெளியேறிவிட்டனர்
பிரித்தானியர்களும் புறப்பட்டுவிட்டனர்
ஆனாலும் இன்னும் ஏன்
ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறோம்


அவர்கள் வெளியேற இவர்கள்
ஆக்கிரமித்துக் கொண்டனர்
அவர்கள் திருப்பித் தந்ததை பின்னர்
இவர்கள் பறித்துக்கொண்டனர்

இவர்கள் ஆக்கிரமிப்பை ஐக்கியம் என்றனர்
விடுதலையை பிரிவினை என்றனர்

மகளே! நம் தேசங்களை கலைத்து ஒன்றுபட்ட நாட்டின்
சுதந்திரத்திற்காக உழைத்த
உன் மூதாதையரை இவர்கள் தம் தோளில்
ஏந்தி கொண்டாடுகையில்

அவர் நினைத்திரார் உன்னை போல் ஒரு
குழந்தை மறைக்கப்பட்ட நம் வரலாறு குறித்து
கேட்குமென...

- தீபச்செல்வன் -



# அமைச்சராவதற்கு என்ன தகுதி?

அப்போது அமெரிக்கக் குடியரசுத் தலைவராக ஆபிரகாம் லிங்கன் இருந்தார். தேர்தல் சமயத்தில் அவருக்கு உதவி செய்தவர்களுள் பெரும்பாலானோர் அவரை ஏதாவது பதவி கேட்டு நச்சரித்துக் கொண்டிருந்தனர். அது பற்றிப் பொது கூட்டத்தில் பேச ஆரம்பித்த போது ஒரு உவமைக் கதையை சொன்னார்.

ஒரு நாட்டு மன்னர் வேட்டையாடப் புறப்பட்டார். மன்னர் அமைச்சரை அழைத்து. "அமைச்சரே இன்று நான் பரிவாரங்களுடன் வேட்டைக்குச் செல்லப் போகின்றேன். மழை பெய்யுமா?"என்று கேட்டார்.
அதற்கு அமைச்சர்.



"மன்னரே. இன்று கண்டிப்பாக மழை பெய்யாது. என் பேச்சை நம்பி நீங்கள் வேட்டைக்குச் செல்லலாம்" என்றார். மன்னரும் அதை நம்பி வேட்டைக்குப் புறப்பட்டார்.

மன்னர் காட்டை நெருங்கிக் கொண்டிருந்த சமயம். எதிரே குடியானவன் கழுதைமீது அமர்ந்து வந்து கொண்டிருந்தான். "இன்று நிச்சயமாக மழை பெய்யும். உடனே நீங்கள் திரும்பி விடுங்கள்." என்று கூறினான். அவனது பேச்சைப் பொருட்படுத்தாத மன்னர் வேட்டையாடச் சென்றார்.
சற்றுத்தூரம் சென்றதும் கடும்மழை பெய்தது. அதனால் மன்னர் முழுமையாக நனைந்துவிட்டார். மன்னர் திரும்பி வரும் வழியில் குடியானவனை மீண்டும் சந்தித்தார். "மழை பெய்யும் என்று எப்படி அவ்வளவு உறுதியாகக் கூறுனீர்கள்"! என்று மன்னர் கேட்டார்.

அதற்கு குடியானவன் "மழை பெய்யுமா?. பெய்யாதா? என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் என் கழுதைக்குத் தெரியும். கழுதை தன் காதுகளை முன் பக்கமாக நீட்டிக்கொண்டால் மழை பெய்யும் என்னும் உண்மையை நான் அறிந்து கொள்வேன்." என்று பதிலளித்தான்.
அரண்மனை திரும்பிய மன்னர். அமைச்சரைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டு குடியானவனுடைய கழுதையை அமைச்சராக்கிவிட்டார்.

இந்தக் கதையை சொல்லிக் கொண்டிருந்த ஆபிரகாம் லிங்கன் "அதற்குப் பிறகுதான் மன்னனுக்குப் பெரும் பிரச்சனை ஏற்பட்டது. ஊரிலுள்ள எல்லாக் கழுதைகளும் தங்களுக்கும் அமைச்சர் பதவி கொடுத்தாக வேண்டும் என்று நச்சரிக்கத் தொடங்கின" என்றார்.

**பதவியில் இருப்பவர்களை கேலிபேசுவதற்கு ஆபிரகாம் லிங்கன் விரும்புவதில்லை.**

# இவர்கள் இன்று இருந்தால்?!...

**சகுந்தலை:** துஷ்யந்தன் மீது ஜீவனாம்ச வழக்குப் போட்டி ருப்பாள்.

**தமயந்தி:** கானகத்தில் காரிருளில் கைவிட்டுப் போன நளனை விவாகரத்துச் செய்துவிட்டு சுயம்வரம் நடத்தியிருப்பாள்.

**பாஞ்சாலி:** தன்னைப் பணயப் பொருளாக வைத்துச் சூதாடிய பாண்டவர் மீது மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டத் தின் பிரகாரம் வழக்குப் போட்டிருப்பாள்.

**கண்ணகி:** கோவலன் தனது நகைகளை வாங்கிச் சென்று மாதவிக்குக் கொடுத்து விடுவான் என்ற பயத்தில் நகைகளை வங்கியில் பாதுகாப்பாக வைத்திருப்பாள்.

**கம்பர்:** காவியம் பாட காவியநாயகர்கள் இல்லாத காரணத்தால் கதாநாயகர்களை புகழ்ந்து சினிமாவுக்குப் பாடல் எழுதிப் பிழைத்துக்கொள்வார்.

**ரவிவர்மா:** சினிமா பானர்கள். விளம்பரப் பலகைகள் எழுதிப் பிழைப்பார்.

**அருச்சுனன்:** வில்லாகிய காண்டீபத்தை வில்லுப் பாட்டுக் கருவியாக்கி ஒரு கோஷ்டி அமைத்துக் கொள்வார்.

**நாரதர்:** தனது பழம்பெரும் தம்புராவை வீசிவிட்டு கிற்றாரும் கையுமாக 'பொப்' பாடல் பாடித்திரிவார்.

**குசேலர்:** குடும்பக் கட்டுப்பாட்டு இலாகா அதிகாரியாகக் கடமை புரிவார்.

**தசரதர்:** அந்நிய நாட்டில் பிழைக்கப் போயிருக்கும் மகனை நினைத்து புத்திர சோகத்தால் கண்ணீர் வடிப்பார்.

**மாதவி:** எலெக்ரிக் வீணையில் கானல்வரி பாடுவாள்.

**இராமன்:** இஸ்ரேலியரின் உதவியுடன் சீதையை அசோக வனத்திலிருந்து மீட்டிருப்பான்.

**நக்கீரன்:** குறுக்கு விசாரணையில் கைதேர்ந்த வழக்குரைஞராக இருப்பார்.



உங்களின் தோல்வி
எங்கே ஒளிந்துள்ளது தெரியுமா
பிரச்சினைகள் வரும்போது அல்ல
பிரச்சினைகளை கண்டு
நீங்கள் பயந்து விலகும் போது

-பாரதி-

# சீனத்துக் கிருமி

சீனத்துப் பொருட்களுக்குத்தான் எத்தனை மவுசு
சிக்கனமாக ஏழைக்கும் தருமொரு சொகுசு
சீனப் பெருமதில் தந்தோர் ஆக்கங்களோ புதுசு
சிம்பிளான சீன மணிகூட்டை கட்டி ஆட்டுது எம்மூர்ப் பழசு
சூமில் - இருந்து டிக் டொக்; வரை கவர்ந்திழுக்கும்
எம் மனசை கடைசியா பெற்றது சீனத்துக் கிருமி கோவிட் வைரசு

சீனத்துக் கிருமி அப்படி என்னதான் செய்தது?
எம்மைக் கப்புறாளைகளாக்கி கடவுளைத் தேட வைத்தது!
ஐக்கியமில்லா அமெரிக்காவை புரிய வைத்தது.
அலுவலக வேலையை வீட்டு வேலையாக்கியது.
அவமதித்த அரசியல்வாதிகளின் உயிர் குடித்தது.
கைப்பேசியைக் காதலிக்க வைத்தது.
குடும்ப அன்பைப் பலப்படுத்தியது. (போதாதா?)

விஞ்ஞானத்தை நம்பாத தலைவர்கள் மறைத்து மூடி
விற்ற அரசியலால் பலியான உயிரோ கோடி
வருத்தத்துடன் வந்தது அனுபவ பாடம் தேடி
குறுகிய காலத்தில் வக்சீனை நாடி
கும்பிட்டு நின்றோம் இறைவனைப் பாடி
சீனத்துக் கிருமி உலகை சூறையாடி
சொன்னது உனக்கு எப்பவும் ஆறடி
முடிவாய்ச் சொல்லுறன் தம்பி,
தள்ளி நில்லும் எப்பவும் ஆறடி



-குளக்காட்டான்-

# பண்பு



உத்திரதேவி கொழும்பில் இருந்து வந்துகொண்டிருந்தது. வவுனியாவை உத்திரதேவி அடைந்தது. வீரத் தமிழர் யாவரும் உசராய் இருந்தனர். சீற்றிலிருந்தவர்கள் தமது அறிவுத்திறமையையும் பண்புத் திறமையையும் எடுத்து விளங்கப்படுத்திக்கொண்டிருந்தார்கள்....

"என்ன இருந்தாலும் பாருங்கோ எம்.ஸி. சுப்பிரமணியம் கொண்டு வந்த தனி இனப் பிரச்சினை" கூடாத ஒன்று. தமிழருக்கை தமிழர் பிரிவினையை வளர்க்கிறதிலே என்ன பிரயோசனம் இருக்கு? பக்கத்தில் இருந்தவர் 'ஆமா' என சொல்லுமாப்போல தலையினை ஆட்டினார். ரெயில் வண்டி மாங்குளத்தை அடைந்தது பேச்சுத் தொடர்கின்றது. எங்கட ஆட்கள் பாருங்கோ பொம்பிளையள் நிண்டாலும் எழும்பி இடம் கொடாயினம்.

இப்படிப்பட்ட சமுதாயம் எங்கட." 'ஆமா' தலையினை ஆட்டினார் கேட்டவர். ரெயில் பளையை வந்தடைந்தது. தமிழன் இனிப் போராட்டம் நடத்தாமல் வாழ இயலாது. இந்த இஞ்சினியர் படிப்பில தமிழனை என்ன செய்தாங்கள் தெரியுதெல்லே.


ஓமோம் கட்டாயம் ரெயில் கொடிகாமத்தில் வந்து நின்றது. போராட்ட வீரர்கள் குதித்தனர். முண்டியடித்துக்கொண்டு யாழ்தேவி பஸ்சைப் பிடிக்க ஓடினர். ஓடிய வேகத்தில் கேற்றிலுள்ள 'டிக்கற் கொலக்ரர்' கீழே சாய்கிறார். அந்தப் பண்புள்ளவர் அதை கவனியாது 761 இலக்கம் கொண்ட பஸ்சில் ஏறிவிட்டார். அதுமாத்திரமல்ல மேலதிகமாக ஒரு சீற் பிடிப்பதற்கு தனது சூட்கேசையும் பக்கத்தில் வைத்துக் கொண்டார். பண்பு அவரைப் பார்த்து சிரித்தது.

பக்கத்தில் இருந்த தமிழர்கள் சிலர் (கம்பியில் தொங்குபவர்கள்) அவர் வீரத்தை வியந்தனர்.

**(1970களில் ரெயில் நடந்த உண்மைச் சம்பவம்)**

-திக்கவயல் தர்மகுலசிங்கம்-

**நிகழ் வழி கல்வி *(Online class)* போது ஒரு ஆசிரியர் மாணவர்களிடம் கொரோனா குறித்து ஒரு சிறு கட்டுரை எழுதச் சொன்னார்.**



# இது எப்படி இருக்கு

ஒரு மாணவன் கீழ் வருமாறு எழுதினான்.
கொரோனா என்பது உலகின் பெரும்பான்மை மக்கள், சிறுபான்மை மக்கள் என அனைவரும் கொண்டாடும் ஒரு பெருவிழாவாகும். பாடசாலைகள், சந்தைகள், தேவாலயங்கள் எல்லாமே மூடப்பட்டு, பரீட்சைகள் யாவும் ரத்து செய்யப்பட்டு கொண்டாடப்படுகிறது.

இந்த விழாவின் போது அனைவரும் முகக்கவசம் அணிந்திருப்பார்கள். வேடிக்கையாக இருக்கும். இந்த நாட்களின் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரால் ஸ்மார்ட் போன்கள் பரிசாக வழங்கப்படும். அந்த விழாக்களின் போது அப்பாமார் சமைக்க கற்றுக்கொள்வார்கள். ஆடைகள் சலவை செய்யவும், வீடு துப்பரவாக்கவும் பயன்படுத்தப்படுவார்கள். அதே நேரம் அம்மாமாரும், பிள்ளைகளும் தங்களது நேரத்தை செல்பேசிகளுடன் கழிப்பார்கள். கொரோனா விழாக்காலம் எனக்கு மிகவும் மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது.!



# மெயில்வாகனத்தாரும் ஒய்யப்பாய்காய்காணியாரும்

என்ன? மெயில்வாகனத்தார் - 25 வருடத்திற்குப் பிறகு சந்திக்கிறோம் சவுக்கியமா? பொங்கல் வாழ்த்துக்கள்.

நன்றி! நன்றி! வாழ்த்துக்கள்.. யுத்த காலத்தில் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சந்தித்த நாங்கள் இப்போ கொரோனா ஆக்கிரமிப்புக்குள் சந்திக்கிறோம் அப்படித்தானே!

'ஓமோம்! எப்பவும் ஆக்கிரமிப்புக்குள் இருக்கும் இனமாகத்தான் நாங்கள் இருக்கிறோம்'

'ஒற்றுமையில்லாத தலைமைகளை ஆதரித்துக் கொண்டு உரிமை சுதந்திரம் பற்றி கதைப்பதில் என்ன பயன்?

'சரியாகச் சொன்னீர்கள்' ஜனநாயகத்தை, பணநாயகர்களிடம் ஒப்படைத்து விட்டு நாங்கள் எல்லாத்திற்கும் கெஞ்சிக் கூத்தாடவும், விரக்தியோடு போராடவும் வேண்டிக்கிடக்குது.

'தமிழர்கள் எங்கே இருந்தாலும் சிறுபான்மை இனமாக இருப்பது பெரும்பான்மைக்கு வசதியாய் போட்டுது'

'ஐம்பது வருஷமாய் போராடியும் பொருளாதாரச் சுதந்திரமும் இல்லை.. அரசியல் சுதந்திரமும் இல்லை..

'எல்லாம் தலைவிதி

'தலைவிதியுமில்லை' ஒண்டுமில்லை எங்களுக்கே நாங்கள் எழுதிக் கொண்ட விதிதான்'!

'சரியாய் சொன்னார்' மகுடியார்! அந்தக் காலத்திலேயே சொன்னது தான் நினைவுக்கு வருகுது. ஒற்றுமை இல்லாத இனம் உரிமைக்காக போராடுவது என்பது நகைச்சுவையானது மட்டுமல்ல வேதனைக் குரியதும்தான்'!

'சந்தைகளில் இருந்து தான் கொரோனாத் தொற்று அதிகளவில் ஏற்பட்டிருக்காமே'!

'ஓமோம் எல்லாமே மலிஞ்சா சந்தைக்கு வந்திடும் என்று சும்மாவா சொல்லியிருக்கிறாங்க'!



# இராமராஜ்யத்தில்...

அப்போது டொக்டர் இராதாகிருஸ்ணன் குடியரசுத் துணைத்தலைவராக இருந்தார். அந்த சமயம் இராஜ்யசபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில் அவர் தலைமை தாங்கினார். இந்தியாவிலிருந்து ஏராளமான குரங்குகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள் என்று ஒரு பிரச்சனை எழுந்தது.

ஓர் உறுப்பினர் எழுந்து, "நமது நாட்டில் இராமராஜ்யம் ஏற்பட வேண்டும் என்று பாடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் எல்லாக் குரங்குகளையும் இப்படி ஏற்றுமதி செய்து விட்டால் குரங்குகள் இல்லாமல் எவ்வாறு இராமராஜ்யம் ஏற்படக்கூடும்?" என்று கிண்டலாகக் கேட்டார்.



அவர் பேச்சுக்குப் பதில் அளிக்கும் விதமாக ஓர் அமைச்சர்,

"நம் நாட்டில் குரங்குகளுக்குப் பஞ்சமில்லை. போனது போக இன்னும் அதிகளவில் குரங்குகள் நம் நாட்டில் இருக்கின்றன" என்றார்.

சபைக்குத் தலைமை வகித்துக் கொண்டிருந்த இராதாகிருஸ்ணன் எழுந்து பின்வருமாறு பேசினார்.

"அமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் இருக்கும் உறுப்பினர்களைப் பற்றி அவ்வாறு பேசி இருக்கமாட்டார் என்று நான் நினைக்கின்றேன்"

அதைக் கேட்ட சபையில் இருந்த அனைவரும் தம்மை மறந்து சிரித்தனர்.



# அந்தரச் சிரிப்பு











அண்ணாச்சி உன்னிடம் பணம் இருக்கு... என்னிடம் பண்பு இருக்கு. பண்புதானண்ணாச்சி மேலானது.

# காலத்தை வென்று நிற்கும் கேலிச் சித்திரங்கள்



# அயலுக்கை ஒரு கலியாணம்

**மலரும் நினைவில்.... ஒரு கதை**

அயலுக்க ஒரு கலியாணத்துக்கு போக முடியாமல் போனா, அண்டைக்கு பின்னேரக்கைக்கு மாப்பிளை-பொம்பிளையை ஒரு எட்டு எட்டிப் பாத்திட்டு வர பிளான் பண்ணுறது வழக்கம். அப்பிடிப் பின்னேரம் போறதெண்டா பொம்பிளை வீட்டைதான் போறதும் முறை. ஏனெண்டா, அங்கதான் மாப்பிளை பொம்பிளை "கால் மாறு"க்கு வந்து நிப்பினை. எங்களுக்கும் கண்டுட்டு வர வசதியா இருக்கும்.

அப்பிடிப் போனா, "வாசலுக்க நிறைகுட மேசையும், கருகின திரியோட எடுத்து முடிச்ச ஆலாத்தி ட்ரேயும் மாங் களகரமா இருக்கும்.



வாசல் கதவோட முதல் நாள் ராத்திரி முழிச் சிருந்து அட்டம் அயல் பெட்டையள் போட்ட தேங் காய்ப் பூ கோலம் சைட் டால அழிஞ்சு போய் இலையான் மொய்ச்சுக் கொண்டு இருக்கும்.

வீடெல்லாம் வடிவா பெயின்ட் அடிச்சிருந் தாலும் நிலத்துக்கு அடிச்சிருக்கிற அந்த சிவப்பு நிற பெயின்ட் எடுப்பா முழிப்பா இருக்கும்.

அங்க இரும்பில செய்த வாடகைக் கதிரைகள் நிறைச்சு அடுக்கி வெச்சிருப்பினை. அதில கீறாத குத்தாத கதிரையா ஒன்டை பாத்து இழுத்துக்கொண்டு போய் இருக்கிறது.

சிவரில டிசு பேப்பரால பெயர் எழுதி ஒட்டியிருக்கும் "வெடிங் இன்னார் ஏ இன்னார்" என்டு.

வீட்டு ஹோலில ஒரு அகலமான டபிள் பின்னல் கதிரை போட்டிருக்கும். அந்தக் கதிரையை ஒரு கம்பளித் துண்டால மூடினா, கிட்டத்தட்ட அந்தப் பின்னல் கதிரை ஒரு "சோபா" லுக் அடிக்கிற மாதிரி மாறிரும். அந்தக் கதிரை யில ஒராள் இருந்தா கொஞ்சம் பெருசுதானேயொழிய ரெண்டு பேர் சௌகரியமா இருக்கேலாது. அந்தக் கதிரைக்க புது மாப்பிளையும் பொம்பிளையும் வடிவா இருக்கேலாம இறுகிப் போய் இருப்பினை. அப்பிடி இருந்த படி தான் அவையை பாக்க போற விசிட்டர்ஸ் எல்லா ரோடையும் பொம்பிளை- மாப்பிளை கதைப்பினை.

வீடியோக்காரன் பிடிச்ச மேக்கூறி லைட் வெக்கைக்கு, மாப்பிள்ளையின்ர ஷேர்ட்டும், பொம்பிளை யின்ர ப்ளவுஸ்ம் வேர்த்துப் போய் ஈரத்தில ஊறி, கொஞ் சம் உள் உடுப்புகள் வெளில தெரியத்தான் இருப்பினை எண்டதை பற்றி கனக்க அலட்ட விரும்பேல்லை.

அது பொம்பிளை வீடா இருக்கிறதால, அந்தப் பொம்பிளை உஷாரா வாய் ஓயாம நொய் நொய் யெண்டு கதைச்சபடியே இருப்பா. அமைதியா பம்மிக்கொண்டு இருக்கிற தன்ர புதுப் புருஷனுக்கு அடிக்கடி திரும்பி இன்ரோவும் குடுப்பா..."இது என்ர பெரியம்மாட மகளின்ர ஹஸ்பன்ட தங்கச்சி".

"இது எங்கட பின் வீட்டில முந்தி வாடைக்கு இருந்த அன்ரி."

"இது நாங்கள் இடம்பெயர்ந்து இருக்கேக்க முன் காணீக்க கடை வெச்சிருந்த அங்கிள்."

"இது நான் முந்தி செம்பாட்டு ஒழுங்கைக்க டியூசன் போகேக்க வழியில என்னைக் கலைச்ச நாயை அடிச்சு திரத்தின அண்ணை....."

இப்பிடி ஒவ்வொருத்தரா அவ இன்ட்ரடியூஸ் பண்ண, அவ சொல்லுற கதையை ஏதோ "பிள்ளையார் கதை" கேட்ட கணக்கா புலனை எங்கையோ விட்டபடி புன்னகையோட கேட்டபடி இருப்பார் அந்தப் புதுமாப் பிள்ளை.

பொம்பிளைட அப்பா எண்டு ஒருத்தர் மடிச்சுக்கட்டின பட்டு வேட்டியும் பெனி யனுமா வலு உஷாரா அங்கையும் இங்கையும் ஓடுப்பட்டுத் திரிவார். மகளின்ர கலியாணத்தை சும்மா ஓஹோ எண்டு நடத்திப்போட்டார் எண்ட பெருமை அவரின்ர அந்த சிரிச்ச மூஞ்சையில அப்பிடிக் கொப்புளிக்கும்.

வந்திருக்கிறவைக்கு மகளின்ர அம்மா இன்னொரு லெவல் கதை சொல்லிக் கொண்டு இருப்பா....

"என்ர மகள் அது பிடிக்கேல்லை இது பிடிக்கேல்லை எண்டு எத்தினை சம்பந்தங்களை வேண்டாம் வேண் டாம் எண்டிட்டு, இந்த மாப்பிள்ளை யைதான் ஆசைப்பட்டு ஓம் எண்டவள்" எண்டு அந்த மாப்பிள்ளையின்ர காதில விழுற மாதிரியே சத்தமா சொல்லுவா. அப்பிடி அவ சொல்லேக்க கொஞ்சம் கூனிக்கொண்டு அலுப்பில சரிஞ்சு இருந்த மாப்பிள்ளை கொஞ்சம் நிமிந்து எல்லாரையும் ஒரு லெவல் பார்வை பாப்பார்.

அது பொம்பிளை வீடு. வந்திருக் கிற எல்லாருமே பொம்பிளை வீட்டுக்கு சொந்தக்காரர் எண்டதால, மாப் பிள்ளை கொஞ்சம் பொழுது போகாம அவதிப்படுவார். என்ன செய்யுற தெண்டு அவர் யோசிக்கேக்க, அங்க கண்டிப்பா ரெண்டு பெண்குழந் தையள் பட்டுப்பாவாடை சட்டையில ஓடித் திரியுங்கள். அதில கையுக்க அம்பிட்ட ஒண்டை தூக்கி மடியில வெச்சுக்கொள்ளுவார். அந்தக் குழந்தை அனேகமா கலியாணப் பொம்பிளையின் அக்காவின்ர குழந்தையா இருக்கும். அக்காக்காரி உடன வந்து "சித்தப்பாக்கு ருவிங்கிள் ருவிங்கிள் பாடிக்காட்டுங்கோ" எண்டு குழந்தையை நச்சரிப்பா. அந்தக் குழந்தையோ அறிமுகமில்லாத மாப் பிள்ளை மடியில இருந்து பேந்த பேந்த முழிக்கும். அக்காக்காரி "ருவிங்கிள் ருவிங்கிள்" எண்டு ஆரம் பிச்சு குழந்தையை பாட வைக்கவே ஏலாம, கடைசில முழுப் பாட்டையும் தானே பாடி "லைக் ஏ டயமண்ட் இன் த ....." எண்டு அவ சொல்ல, குழந்தை "ஸ்கை" மட்டும் மெல்லமா சொல்லும்.

மாப்பிளையோ அந்தக் குழந்தையை "குட் கேர்ள்" எண்டு சொல்லி கை தட்டியும் விட்டுட்டு, மடியில இருந்து மெதுவா இறக்கி விட்டுடுவார்.

பொம்பிளையின்ர "கியூட்" தங்கச்சி- மார் ரெண்டுபேர் கால்வ் சாறியோட அந்தப் புது அத்தானுக்கு கொஞ்சம் நெளிஞ்சு குழைஞ்சுகொண்டு அது- வழிய திரிவினம்.



பொம்பிளையின்ர தம்பிக்காரன் டெக்செட்ல"சின்னத்தம்பி", "வருஷம் 16" பட பாட்டுகள் சத்தமா போடு வான். கார் பற்றரியில இருந்து கனெக்ஷன். கொடுத்த ஸ்பீக்கர் பொக்ஸ்சை அந்த வாடகை கதிரை யில வெச்சிருப்பான். அவனின்ர பிரண்ட்ஸ் உம் பாவங்கள்... ஓடி யோடி சாப்பாட்டுப்பந்தி வெச்சு அலுத்துக் களைச்சுப்போய் மூலை க்கு மூலை அதுவழிய நாய் படுத் துக் கிடக்கிற மாதிரி கிடப்பாங்கள்.

கலியாணப் பொம்பிளை பண்ணுற கூத்தைப் பாக்கோணும் அங்க. அப்பப்பா.... மாப்பிளையின்ரதலைப் பாகைல ஆறு மணித்தியாலமா சிக்கிக் கிடந்த அரிசி ரெண் டொண்டை தேடிப்பிடிச்சு தட்டி விடுவா.

அவரின்ர தோளில் இருக்கிற சால் வையை இழுத்து செட் பண்ணி விடுவா.

மடிஞ்சிருக்கிற அவரின்ர கொலரை செட் பண்ணி விடுவா.

பக்கத்திலகிடக்கிறஉதயன்பேப்பரை நாலா மடிச்சு, அவருக்கு விசுக்கியும் விடுவா.

இதைப் பாத்திட்டு சுத்தி இருக்கிற அறுபது வயசுக்கார பொம்பிளை யள் தங்களுக்கை கதைபடுவினை "நல்ல சோடி இவை ரெண்டுபேரும்" எண்டு. அதை கேக்கேக்க தாய்க் காரிக்கு வலு புழுகமா இருக்கும்.

வந்து இருக்கிறவைக்கு குட்டிக் குட்டி சில்வர் தட்டுகளில பலகாரங்கள் குடு படும். அந்த தட்டை பாத்தா அதில, ஒரு சிறங்கையளவு மிக்ஸர், ஒரு லட்டு, ஒரு சீனி அரியாரம், சிப்பி-சோகி முறுக்கு நாலு, ஒரு நைஸ் பிஸ்கட் வெச்சிருப்பினம். பலகாரத் தட்டை குடுத்திட்டு, திண்டதோ தின்னேல் லையோ எண்டும் பாராம அடுத்த நிமிசமே தேத்தண்ணியை நீட்டு வினை. எவர் சில்வர் டம்ளர்ல ரின் பாலில போட்ட தேத்தண்ணி அந்த மாதிரி வாசமா இருக்கும். தேத் தண்ணியை வாங்கி கதிரை காலுக்க வெச்சிட்டு பலகாரத்தை ஒரு வெட்டு வெட்டுறது. தட்டு முழுக்க வழிச்சு துடைச்சு தின்னுறது மரி யாதையில்லை எண்டிட்டு, மிக்ஸ ருக்க இருக்கிற கச்சான் பருக்கை ஒண்டு ரெண்டை மட்டும் தட்டில

மிச்சம் விடுறது வழக்கம். தேத்தண்ணி டம்ளரை பெருவிரல்-நடுவிரலால (மிச்ச விரலு-களை விரிச்சபடி) விளிம்பில பிடிச்சுத் தூக்கி "சர்ர்ர்ர்ர்ர்ர்" எண்டு சத்தமா உறிஞ்சுற உறிஞ்ச லுக்கு பக்கத்தில இருக்கிறவையின்ர தட்டில இருக் கிற பலகாரங்கள்கூட சாடையா இழுபடுற மாதிரி ஒரு பீலிங். அப்பிடி தேத்தண்ணியை குடிக் கேக்கதான் சாடையா தலையை நிமித்தி பொம் பிளை-மாப்பிளை என்ன செய்யினம் எண்டு தேடுறது.

எழும்பிப் போய் மணமக்களுக்கு வாழ்த்தை சொல்லுவம் எண்டிட்டு கிட்ட போய் ஏதோ கஞ்சா பக்கெட்டை கைமாத்துற மாதிரி பொம்பிளையின்ர கையுக்க என்வலப் ஒண்டை செருகுறதுதும் ஒரு பாஷன் தான். அவவும், "ஏனிப்ப இதெல்லாம் கொண்டு வந்தனீங்கள்?" எண்டு சிணுங்கிக் கொண்டு என்வலப்பை வாங்குவா. காசா குடுத்தா விரும்பினதை வாங்குங்கள் எண்டு இப்பிடி ஒரு சிலர்தான் நினைப்பினம். மற்றவை எல்லாம் வழக்கமான கப் அன்ட் சோசர் செட் தான் அன் பளிப்பா குடுப்பினம். புதுசா கலியாணம் முடிச்சு குடும்பம் தொடங்குறதுகளுக்கு 400 கப்பும் 450 சோஸரும் என்ன விதத்தில உதவப்போதோ தெரி யேல்லை. ஆனா அன்பளிப்பா எதைக்கொடுத் தாலும் கமெரா லென்ஸ் எங்களைப் பாக்கேக்க டப்பெண்டு குடுக்கிறது சத்தியமா தற்செயல் சம்பவமே தான்.

இனியென்ன வெளிக்கிடுவம் எண்டிட்டு, "போட்டு வாறன்" சொல்லி வெளிக்கிடேக்கை ஓராள் அங்க ஓடிவரும்....

"இஞ்ச... பலகார பை ஒண்டு வீட்ட கொண்டு போங்கோ" எண்டு ஒரு பிரவுண் பையை நீட்டு வினை. கண்ணை அகலமா விரிச்சு சிரிச்சுக் கொண்டு அதை வாங்கேக்க, பொம்பிளைட அம்மா அங்கால சொல்லிக் கேக்கும்....

"தம்பிக்கு இன்னொரு பையும் குடுத்து விடுங்கோ"

ம்ம்ம். இரட்டிப்பு சந்தோசம்

இனி பொம்பிளை-மாப்பிளையும் வெளிக்கிட போகினமாம். பொம்பிளையின்ர உடுப்புகள் அடுக்கின சூட்கேஸ் ரெடி. கடுதாசி பூவால சோடிச்ச மொறிஸ் ஒக்ஸ்போர்ட் கார் ரோட்டில ரெடி.

"வாழ்க மணமக்கள்"

ரஞ்சித் தவா,
பிராம்டன், கனடா

('90களில் யாழ்ப்பாணத்தில் கண்ட காட்சிகளின் நினைவுத் தொகுப்பு

# குறும்பா



சிவநளினா அணிந்தாள்லெக்
யீன்சு (legjeans)
சிலநாளில் அவளுக்கொரே
பான்சு ------
நவநளினம் மீதவளின்
நாட்டமது சென்றுவிட
தவறவிட்டாள் தமிழ்மரபுச்
சான்சு (chance).



வானதியைச்
சுற்றிவந்தான்
வண்ணன்
வழியிலிதைக்
கண்டஅவள்
அண்ணன்,
"ஏனவளைச் சுற்றுகி
றாய்?
இரு!உனக்கு
இருக்கு"தென
"நானுமவள்
அண்ண"னென்றான்
விண்ணன்.





சாந்தனுக்கோ
சாந்தினிமேற் காதல்
சாந்தினியின் வீட்டில்
ஒரே மோதல்
பேந்தொருவன்
சாந்தினியை பேசி
மணம் பூண்டு விட
சாந்தனிப்போ முடி
வெடுத்தான் சாதல்!

எங்கிலுமே வெற்றி
கொள்வான் காசி
எதிர்வாதம் பொய்புரட்டுப் பேசி
சிங்கனெனப் பெயரெடுத்தான்
சீக்கிரமே அதையிழந்தான்
தங்கிடுமோ பொய்ப்புகழ்ச்சி?
யோசி!



வ.வடிவழகையன்
காரைநகர்


Hari Creation Studio
2021
Hari Creation Studio, Can Make
any of you function into
Evergreen Memory
any where in Sri Lanka or any where
in the World
Call us to make Orders
0212244232 | 0773644176 | 0774335553
+94 077 364 4176
haricreation8@gmail.com
Station Road Chunnakam
(Opposite to Police Station)



# திருக்குறளும் ஒரு கதையும்

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

**விளக்கம்**


பொருள் - எந்தப் பொருளானாலும், அது எப்படிக் காட்சி தந்தாலும் அப்பொருளின் வெளித் தோற்றத் தைக் காணாமல், உள்ளடக்கமாகிய உண்மைப் பொருளைக் காண்பதே மெய்யுணர்தல். நாம் ஒரு பொருளை வெளியில் இருந்துபார்க்கும் பொழுது எப்படி தோன்றுகிறதோ, அதை வைத்தே அந்த பொருளை பற்றிய முடிவை நாம் எடுப்போம். ஆனால் ஆழமாக உற்றுப் பார்த்தால்தான் அந்தப் பொருளினு டைய உண்மையான தன்மைஎன்னவென்று தெரியும். எப்போதும் கண்ணுக்குத் தெரியும்காட்சிப் பொருளை வைத்து நாம் எந்த தீர்மானத்தையும் எடுக்கக் கூடாது. பலாப்பழம் வெளித்தோற்றத்திற்கு முள்ளு நிறைந் ததாக இருக்கும்.ஆனால் அதன் உள்ளே இருக்கும் சுளை மிகவும் சுவையாக இருக்கும். பாகற்காயும் இதே போன்றுதான் கசப்பாக இருந்தாலும் அதன் பயன்பாடு மிகவும் உன்னதமானது. இதயத்திற்கு பலமளிக்கக் கூடியது. சில மனிதர்களும் இப்படித் தான் அவர்களது வெளித்தோற்றத்தை வைத்து நாம் அவர்களை யார் என்றும், இப்படித்தான் இருப்பார்கள் என்றும் முடிவு எடுக்க முடியாது ஆழமாக ஆராய்ந்து அறிய வேண்டும். வள்ளுவரின் கருத் தாழம் மிக்க குறளை ஒரு சிறுகதை மூலம் அறியலாம்.

ஒரு காட்டில் நிறைய மிருகங்கள் இருந்தன. வேடர்களிடமிருந்து அந்த காட்டைப் பாதுகாப்ப தற்காக சிங்கம் காட்டு ராஜாவாகவும், கரடி மந்திரி யாகவும் கடமையாற்றி வந்தன. நீண்ட நாட்களாக இவர்களை ஏமாற்றிக் கொண்டிருந்த நரியை ஒரு நாள் கண்டுவிட்டார்கள். எப்படி யாவது அந்த நரியைப் பிடித்துத் தண்டனை கொடுக்க வேண்டும் என துரத்திக் கொண்டு கரடி, சிங்கம், முயல், யானை, குரங்கு என எல்லா மிருகங்களுமாகச் சேர்ந்து பின் தொடர்ந்தன. அப்படி ஓடிக் கொண் டிருக்கும் பொழுது நரியார் ஒரு நீலச் சாய வாளிக்குள் விழுந்து விட்டார். இதனால் நரி நீல நிறமாக மாறியது. நரியின் நிறத்தினைப் பார்த்து பின்னால் துரத்தி வந்த மிருகங்கள் பயந்தோடின. தனக்கு பின்னால் வந்த மிருகங்களைக் காணாததால் திரும்பி ஒரு முறை பார்த் தது நரி. எல்லா மிருகங்களும் பயந்து ஓடுவதைப் பார்த்த நரிக்கு ஆச்சரி யமாக இருந்தது. தன்னைக் கண்டு பயந்து ஓடுகிறார்கள் எனவே இவர்களை சற்று ஏமாற்றலாம் என்று எண்ணி யது. காட்டு ராஜா உட்பட மற்ற மிருகங்களிடம் நான்தான் உங்களை பாதுகாக்கவென இறைவனால் அனுப்பப் பட்டவன். இனி நான்தான் இந்த காட்டுக்கு ராஜா என்றது. மற்ற அனைத்து மிருகங்களும் யோசித்தன. "இதுபோல் முன்னர் இந்த காட்டில் ஒரு மிருகமும் இல்லையே உண்மையாகவே இறைவனால் அனுப்பப் பட்டதுதான் போலிருக்கிறது" என்று எண்ணி அதன் கட்டுப் பாட்டிற்குள் அனைத்து மிருங்கங்களும் வந்தன. திமிரும், தந்திரமும் கொண்ட நரியோ தன் அடாவடித்தனங்களை எல்லாம் காட்ட ஆரம்பித்தது. மிருகங்களைப் பார்த்து மீன் கொண்டு வா, பழங்கள் கொண்டு வா, என கட்டளை யிட்டது ஒரு நாள் நன்றாக சாப்பிட்டு விட்டு உறங்கியது. அன்று நள்ளிரவு கடும் மழையுடன் கூடிய பெரும்புயல் வீசத் தொடங்கியது. இதனால் நரி நன்றாக நனைந்து உடலில் பூசப்பட்ட சாயம் வெளுத்தது. இதனைக் கண்ட மற்றைய மிருகங்கள் சாயம் போன நரியைத் துரத்த ஆரம்பித்தன.

இந்தக் கதை மூலமாக நாம் அறிவது ஒரு வருடைய வெளித் தோற்றத்தை வைத்து நாம் அவர் களுடைய குணாதிசயங்க-ளையோ, நல்லவரா கெட்டவரா என்பதையோ அறிந்து கொள்ள முடியாது. பழகிப் பார்த்து அலசி ஆராய்ந்து தீரவிசாரித்துதான் அவரைப் பற்றி தெரிந்து கொள்ளமுடியும். இதைத்தான் திருவள்ளு வர் கூறுகின்றார். எப்பொருள் எத்தன்மையதாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.

எழுதியவர் : Liverpool (லிவர்பூல்) சசிராஜா

ஆக்கம் அனுசரணை :
குணரட்ணம் கிருபாகரன்



ANNA COFFEE
அண்ணா கோப்பி
காலங்கள் கடந்தும் மாறாத சுவை பாரம்பரியம்!
ANNA COFFEE
காலைப்பொழுதின் உற்சாகம்...
அண்ணா தொழிலகம் : இணுவில் தெற்கு, இணுவில்

# G SYSTEM
DREAM OF TECHNOLOGY



## EPOS SYSTEM

BASED ON HYBRID
AND
CLOUD TECHNOLOGY

## CCTV
FOR OVERALL SECURITE



IP PBX TO SUIT YOUR BUSINESS
COMMUNICATIONS AND
IDEAL SOLUTIONS FOR
INFORMATION TECHNOLOGE

gsystems.com

PROVIDING
ADVANCED TECHNOLOGY
SERVICES AT AFFORDABLE
PRICES



## ALARM SYSTEM
FOR COMPLETE PROTECTION

UK
0203 500 5344

FRANCE
018 488 5064

SWITZERLAND
031 528 16 79




இச் சஞ்சிகையானது இல 196, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய கண்டுபிடிப்புகளுக்கான வளர்ச்சியகம் (CENTRE FOR CREATIVITY AND INNOVATION) நிறுவனத்தால் இல 551D மனோகரா சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள JAFFNA AD MART நிறுவனத்தினால் 2021 ஆண்டு தை மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஸ்தாபக ஆசிரியர் சி.சிவஞான சுந்தரம் (சிரித்திரன் சுந்தர்)